புதுமலர்: 15 இதழ்: 05 புரட்டாசி - ஐப்பசி

# அனல்

01.09.2017

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



## திருச்சபையின் முக்கியத்துவமும்

## தேவன் எமக்கு கொடுத்த

## திருச்சபை தலைவர்களின்

## முக்கியத்துவமும்

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

பக்கம்: 36 ஆண்டு: 2017 ஆசிரியர்: வே.மகாராஜா

# பொருளடக்கம்


01. அனலின் சத்தம்

02. கதையும் கற்றதும் - பெற்றோரைக் கனம்பண்ணுங்கள்

03. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல்

04. ஜீவ அப்பம் நானே

05. பெண்கள் பக்கம் - நீ கர்த்தருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமா?

06. நற்செய்திப்பகுதி - பாதங்கள் தயங்கும் பாதைகளில்...

07. தேவ பணியாளர் பட்டறை

08. சிறுவர் வட்டம் - சிவப்பு ரோஜா

09. அருட்பணியாளர் சரிதை - ஜான் வெஸ்லி, ஜேம்ஸ் கால்வர்ட்

10. குறுக்கெழுத்துப்போட்டி - 81

11. வினா விடை - 83

12. அனலின் ஆன்மீக விருந்து




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.


**எழுத வேண்டிய முகவரி:**

**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**





**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**


**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**



***T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk***


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -



# ஆசிரியரிடமிருந்து...

தேவனுக்கு மகிமையுண்டாகட்டும்! **“வல்லமை யுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்” லூக்கா 1:49** தேவனுடையவர்களுக்கு நிந்தனைகளுக் குள்ளே மகிமையின் பொக்கிஷமாம் கிறிஸ்து வெளிப் படுவார் என்பதற்கு மரியாள் மிகச் சிறந்த உதாரணம். பிரியமான சகோதரங்களே, இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்வில் மகிமையானவைகளைச் செய்யக் காத்திருக்கி றார். சீரிய, மெய் ஒழுங்குள்ள, தூய்மையான உன் வாழ்வின் அகத்திலும், புறத்திலும் கிறிஸ்து வெளிப்பட உன்னை தெரிந்து கொண்டிருக்கிறார்.

கிறிஸ்துவுடனான உன்னத பயணத்தில் உன்னை யும் இணைத்துவிடு. அவருடனான செல்லுதல் மகிமையாய் உன் வாழ்வில் விளங்க பூரணமான அர்ப்பணிப்புத் தேவை.

வல்லமையானவரின் மகிமையான செயல்களுக் கான, அவருடைய நம்பிக்கைக்குரிய பாத்திரமாக உன்னை அர்ப்பணிப்பாயா?

உன்னதமான தேவனுடைய சாட்சி நீ. தேவன் உன்னை தம்முடைய மகிமையான செயல்களால் நிறைத்து ஆசீர்வதிப்பாராக.

**- ஆசிரியர் -**

# கதையும் கற்றதும்



வை. விமலதாஸ்



## பெற்றோரை கனம்பண்ணுங்கள்!

ஒரு ஊரில் யோண் என்கிற சிறுவன் இருந்தான். அவனுக்கு அவனுடைய தாய் மட்டும் தான் இருந்தார். அவனுக்கு தகப்பன் இல்லை, அவன் சிறுவனாக இருக்கும் போதே தகப்பன் இறந்துவிட்டார். எனவே அவனுடைய தாய் மிகவும் கஷ்டப்பட்டு ஏனைய வீடுகளில் வீட்டு வேலை செய்து அவனை வளர்த்தார். அவனை நன்றாகப் படிக்க வைத்து அவனுக்கு தேவையான வற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்து அவனைப் பாசத்துடன் வளர்த்துக் கொண்டு வந்தார். யோணிற்கும் தாயின் மேல் மிகுந்த பாசமும் பிரியமும் இருந்தது. ஆனாலும் அவனுக்கும் எல்லா சிறுபிள்ளைகளுக்கும் இருப்பதைப் போன்ற பிடிவாதக்குணம், எதிர்த்து காரியங்களை செய்கின்ற நிலை எல்லாம் அவனுக்குள் இருந்தது. இதனால் அவனது தாய் அவனை ஒவ்வொரு நாளும் கண்டித்துக் கொண்டே வந்தார். அவனை எப்படியாவது நல்லமுறையில் வளர்த்துவிட வேண்டும் என்று எப்போதும் அவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டே இருப்பார்.

இதனால் யோனுக்கு சிலவேளை தன் தாயின் மேல் மிகுந்த கோபம் வரும். இவ்வாறு தான் ஒரு நாள் அவன் சிறிய தவறைச் செய்துவிட்டான். இதனால் அவனது தாய் அவனைத் திருத்த முற்பட்டார். இதனால் இவனுக்குப் பயங்கரக் கோபம் கொண்டு தன் தாயுடன் சண்டையிட்டு வீட்டை விட்டே ஓடிப்போய்விட்டான். அவன் நேராக தன்னுடைய சித்தியின் வீட்டிற்கு ஓடிச் சென்றான். அவனுடைய வீட்டிற்கு அருகில் தான் சித்தியின் வீடு இருந்தமையால் நேராக அங்கே சென்றான். அங்கே தன்னுடைய சித்தியிடம் அம்மா எப்போதும் என்னை திட்டிக்கொண்டே இருக்கிறார், எப்போதும் ஏதோ ஒரு காரியத்தை கூறிக்கொண்டே இருக்கிறார், என்னை எதுவும் செய்யவிடுகிறார் இல்லை என்று சித்தியிடம் முறையிட்டு அழுதான். அவன் அவ்வாறு சொற்ப நேரம் அழுத பிற்பாடு சித்தி அவனது முகத்தைப் பார்த்தார். அவன் அழுது மிகவும் களைத்து சோர்ந்து இருந்தான். அவன் இப்போது பசியாய் இருக்கிறான் என்பதனை புரிந்து கொண்ட சித்தி உடனடியாக அவனுக்கு பிரியமான உணவை தயார் செய்து

அவனிடம் கொடுத்து இந்த உணவை முதலாவது சாப்பிடு, நீ இப்போது பசியாய் இருக்கிறாய் என்றார். அவன் அழுது களைத்துப்போயிருந்தமையால் அந் நேரத்தில் அந்த உணவு அவனுக்கு மிகுந்த சுவையாக இருந்தது. அவன் அதனை ஆவலுடன் சாப்பிட்டான்.

சாப்பிட்டவுடன் சித்திக்கு நன்றி சொன்னான். சித்தி நீங்கள் சமைத்த உணவு மிகவும் சுவையாக இருக்கிறது, எனக்கு நன்றாக பிடித்திருக்கிறது, எனக்கு ஏற்றதைப் போன்று சமைத்திருக்கிறீர்கள், என் வாழ்நாள் முழுவதும் உங்களை மறக்கமாட்டேன் என்று பல வார்த்தைகளால் சித்தியை பாராட்டி அவளைக் கட்டியணைத்தான். அப்போது சித்தி என்னைப் பாராட்டியதற்கு நன்றியப்பா, ஆனாலும் இந் நேரத்தில் உனக்கு ஒரு காரியத்தை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன் என்றார். சொல்லுங்க சித்தி, என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்டான். அப்போது சித்தி சொன்னார்: நீ இன்றைக்கு ஒரு நாள் என்னுடைய வீட்டிற்கு வந்தாய், நானும் உனக்கு இன்றைக்கு தான் சாப்பாடும் கொடுத்தேன். நீ என்னை வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன் என்று பாராட்டுகிறாய். ஆனால் ஒரு காரியத்தை நீ நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய அம்மா இத்தனை வருடங்களாக தனியாக கஷ்டப்பட்டு, வீடுகளில் வீட்டு வேலை செய்து ஒரு நேரமும் தவறாமல் உனக்கு சாப்பாடு கொடுக்கிறார், உனக்கு தேவையானவற்றையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறார், எப்போதாவது நீ வீட்டில் சாப்பிடாமல் பட்டினியாய் இருந்திருக்கிறாயா, இல்லையே, எங்களுக்குத் தெரியும் உன்னுடைய அம்மா உனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார் என்று. ஆனால் நீ எப்போதாவது ஒரு நாள் உன்னுடைய அம்மாவுக்கு நன்றி கூறியிருக்கிறாயா? அம்மாவோடு கோபித்துக் கொள்கிறாயே, அம்மாவோடு சண்டையிடுகின்றாயே ஆனால் அம்மா உனக்காக செய்த இந்த அற்புதமான காரியங்களை எப்போதாவது நினைத்திருக்கிறாயா? நீ உன் அம்மாவைக் கவனித்திருக்கிறாயா தான் சாப்பிடாவிட்டாலும் உனக்கு எப்படியாவது சாப்பாடு தரவேண்டும் என்று எவ்வளவு காரியங்களை செய்கிறார். இதற்காக நீ அம்மாவுக்கு நன்றி எப்போதாவது சொல்லி இருக்கிறாயா என்று கேட்டார்.

இதைக் கேட்ட யோன் தன் மனதிற்குள் உணர்வடைந்தவனாய் என்னுடைய அம்மா எனக்காக எவ்வளவு காரியங்களை செய்கிறார், எனக்காக எவ்வளவு அர்ப்பணிப்புக்களைச் செய்கிறார். நான் அதனை இதுவரை புரிந்து கொள்ளாமல் ஓடிவந்துவிட்டேனே, ஒரு நாளும் அம்மாவுக்கு நான் நன்றி சொன்னதே இல்லையே, ஒவ்வொரு நாளும் எனக்கு பிடித்த உணவுகளை விதம் விதமாக செய்து எனக்கு கொடுப்பார்களே, ஒரு நாளும் நான் பசியோடு இருக்கவிடமாட்டார்களே என்று சொல்லி உடனே தன்னுடைய வீட்டிற்கு ஓடிச்சென்றான். அங்கே அவனுடைய அம்மா இவனுக்காக வாசலில் காத்துக்கொண்டிருந்தார். இவன் சென்ற உடனே அம்மா கட்டியணைத்துக் கொண்டு வா உனக்காக சமைத்து வைத்திருக்கிறேன் சாப்பிடு என்று சொல்லி அவனை உள்ளே அழைத்துக் கொண்டு சென்றார். அங்கே இவனுக்கு பிடித்த உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. உடனே யோண் தன் தாயைக் கட்டியணைத்துக் கொண்டு அம்மா நான் உங்களை புரிந்து கொள்ளாமல் வாழ்ந்துவிட்டேனே, அம்மா நான் உங்களை நேசிக்கிறேன், உங்களுக்கு நன்றி என்று சொல்லி அழ ஆரம்பித்தான்.


*ஆம் நண்பர்களே நாம் பெரும்பாலும் தவறவிடுகிற காரியம் பெற்றோரின் அன்பை புரிந்து கொள்வதில்லை.*

அஜந்தா 2017

பெற்றோர் எமக்கு கடமை செய்ய வேண்டியது அவர்களின் பொறுப்பு என்று கருதுகிறவர்களும் உண்டு. ஆனால் அவைக்கு மத்தியில் பெற்றோர் எப்படி எமக்குரிய காரியங்களை தவறாமல் பார்த்துப் பார்த்து நேரம் தவறாமல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்கின் றோமா? அவர்களுக்கு நன்றி எப்போதாவது சொல்லி இருக்கிறோமா? அவர்களை நாம் நேசிக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும், ஆனால் அதனை அவர்களுக்கு நாம் வாயினால் கூறியிருக்கிறோமா? பிள்ளைகளைச் சுற்றி சுற்றியே பெற்றோரின் மனநிலை எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் பிள்ளைகளை எப்படி நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்றே நினைத்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் வைத்திருக்கும் அன்பை அவர்களுக்கு வெளிப்படையாக காண்பிக்க வேண்டும். உங்கள் பெற்றோரைப் பார்த்து நான் உங்களை நேசிக்கிறேன் என்று கூறுங்கள், உறவுகளை கட்டியெழுப்புங்கள் வாழ்க்கை பூந்தோட்டமாய் மாறும். **எபேசியர் 6:3 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 80

## சரியான பதில்கள்



**இடமிருந்து வலமாக**

01. காரியசித்தி (ஆதி 34:2)
04. யேகோவா (யாத் 6:3)
07. கோரேஸ் (எஸ்றா 1:4)
08. பகூரிம் (11சாமு 19:16)
10. அபியத்தார் (1இரா 2:26)

**வலமிருந்து இடமாக**

02. அத்தாலியாள் (11நாளா 22:10)
06. தாயின் (நீதி 30:17)
09. சாமுவேல் (1சாமு 3:1-18, 7:6)
11. பாகால்பிராசீம் (1நாளா 14:11)

**மேலிருந்து கீழாக**

01. காய்மகாரம் (1சாமு 18:9)
03. தாத்தான் (எண் 26:9)
05. பேரேஸ்ஊசா (11சாமு 6:8)

**கீழிருந்து மேலாக**


10. அபிமெலேக்கு (நியாயா 9:6)
11. பார்வோன்நோகோ (11இரா 23:29)
12. மோசே (உபா 34:7)




# பிரவேசிக்காதீர்! ஆபத்தான எல்லைக்குள்...



வாலிபர் வளாகம்



வாலிப பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை என்று வேதம் நமக்கு சொல்லிக் கொடுக்கிறது. ஆபத்தான நேரங்களிலும், சோதனைகளிலும் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கை உண்டாக்குவேன் என்றும் வாக்குப் பண்ணுகிறார். ***வாலிபப் பருவம் கயிற்றின் மீது நடப்பது போன்ற ஆபத்தான பருவம் தான்.*** ஆனால் ஆபத்தான எல்லையைக் கிட்டிச் சேராதவரை நாம் அச்சப்படத்தேவையில்லை. இதற்கு எடுத்துக் காட்டாக,

## தனியாகச் சென்று வீணாய் போனாள் தீனாள்

இவள் அனேக சகோதரர்களோடு கூடப்பிறந்தவள். சாதாரண ஓர் வாலிபப் பெண். ஒரு புதிய ஊருக்குக் போயிருக்கிறாள். அந்த ஊரைப் பற்றி அவளுக்குத் தெரியாது. அந்த சூழ்நிலையில் அவள் தன்னந்தனியாக போயிருக்க வேண்டிய அவசியமே கிடையாது. வீடு நிறைய வேலைக்காரர் இருந்தார்கள். ஆயினும் இவள் துணிச்சலோடு தனியாகப் புறப்பட்டுப் போனது இவளது முதலாவது தவறு.

***அருமையான தம்பி, தங்கையே நீங்கள் யாராக இருந்தாலும் சரி, வாலிப வயதுடைய எந்த எதிர்ப்பால***

ரோடும் தனிமையில் இராதீர்கள். நீங்கள் ஒரு முறை கறைபட்டு விட்டால் கூட போதும் அது உலகத்திற்கு தெரியாவிட்டாலும் உங்கள் மனதை காலம் முழுதும் அரித்துக் கொண்டேயிருக்கும். அது எளிதில் ஆறாத புண். எந்த மனிதனையும், மனுஷியையும் இந்த விடயத்தில் நம்ப வேண்டாம்.

---

*பிரியமான வாலிப தம்பி, தங்கையே கவனமாய் வாசியுங்கள். தேவனிடத்திலிருந்து நல் ஆலோசனைகளைப் பெற்றுத்தருவார், தீர்க்கதரிசனம் சொல்லுவார் என்று நினைத்து தனியே போய் சீரழிந்து போனவர்களும் உண்டு. உதவி செய்யப் போய் உருக்குலைந்தவர்களும் உண்டு. இங்கே தீனாள் வேலைக்காரரையாவது, அண்ணனையாவது, தம்பியையாவது கூட்டிக்கொண்டு போயிருக்கலாம். ஆனால் தனியாய் சென்று தகாததைச் சம்பாதித்துக் கொண்டாள்.*

---

உலகின் எந்த இடத்தில் (நாட்டில்/வேலைத்தளத்தில்) இருந்தாலும் நீ செய்யப் போகும் செயலை பலதடவை யோசித்துப் பார். எழுந்தமானத்தில் உன் மனதின் போக்கில் போய் சிக்கிக் கொள்ளாதே. பல வேளைகளில் நீ தீர்மானங்களை செயற்படுத்த சரியான வழிகளை கையாள்வதே உன் வாழ்வை களங்கமற்றதாக வைத்துக் கொள்ள உதவும்.



## எச்சரிக்கை கவனம்!

## ஆபத்து கவனம்!

## ஆபத்து!!!

எந்த தவறும் முதலில் மிகச் சிறியதாகத்தான் ஆரம்பிக்கும். இன்னும் சொல்லப் போனால் இதிலே என்ன தவறு இருக்கிறது?... என்பது போலத்தான் தெரியும். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அது வளர்ந்து முளைத்துவிட்ட பிற்பாடு அதினின்று மீள்வது கடினம். மேலும் அப்படி வெளியேவர முடியாமல் தங்கள் வாழ்க்கையை நரகமாக்கி கொண்டவர்களும் அனேகர்.

## கவனியுங்கள்!

தேவனுக்குப் பிரியமாய் வாழ விரும்பும் அனேக வாலிப பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட காலகட்டத்தில் எப்படி வாழ்வது என்பது தெரியாமல் போய்விடுகின்றது. இதிலே எப்படிச் செயற்பட வேண்டும். வாலிப பிராயத்தில், வயதின் காரணமாக தேவன் தந்தருளிய ஓர் ஈர்ப்பு மறுபாலரோடு உண்டாவது இயற்கை. இதை தேவனே செய்திருக்கிறார். அதனை முறைப்படி

செயற்படமாத்திரம் அனுமதிக்க வேண்டும். அது ஒரு விருப்பமாக மாறும் போது அது தான் முடிவு என்று எந்த வாலிப பிள்ளைகளும் வீழ்ந்துவிடக்கூடாது. அந்த ஈர்ப்பு மோகத்தினாலும் உண்டாக வாய்ப்பு உண்டு.

அம்னோன் என்ற தாவீதின் மகன் தன் ஒன்றுவிட்ட சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கம் கொண்டு வியாதிப்பட்டதாக நாம் காண்கின்றோம். அது விருப்பத்தினால் உண்டானதல்ல, மோகத்தினால் உண்டானது. ஆகையால் தான் பின்னதாக அவளை வெளியே தள்ளி, அவமானப்படுத்தி. அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும் அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது. இது காதலா? அன்பா? சிநேகமா? ஆங்கிலத்தில் எல்லாவற்றையும் "Love" என்றே குறிப்பிடப்பட்டிருந்தாலும் இது முற்றிலும் மாம்சீக இச்சையினால் உண்டான காமம். Lust அவள் எனக்கு கிடைச்சா போதும், ஒரு முறையாவது அனுபவிச்சா போதும்... என்கிற இச்சை. தம்பி, தங்கையரே இப்படிப்பட்ட அம்னோன்கள் இன்றைக்கும் உண்டு, எச்சரிக்கை!

அவரைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? அவரு என்மேல உயிரையே வைச்சிருக்காரு, நீயில்லாமல் நானில்லை என்றாரு, அப்படி... இப்படி... என்று சொல்கிறவர்களுக்கு தாமாரின் வாழ்க்கை ஒரு தரமான எச்சரிக்கை. அம்னோன் தாமாரைக் கெடுத்த பின் அவளை மிகவும் வெறுத்து வேலைக்காரர்களிடம் அவளைப் பிடித்து வெளியே தள்ளுங்கள் என்று கட்டளையிட்டான். அவளை நினைத்து, நினைத்து உருகினவன், இப்போது பழத்தை சாப்பிட்டு விட்டு கொட்டையைத் தூர எறிவது போல எறிந்துவிட்டான். நீங்களும் இவ்விதமான கண்ணியில் சிக்கிக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு, நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**எச்சரிக்கை கவனம்! ஆபத்து கவனம்! ஆபத்தான எல்லை!**

---

இந்த எல்லைக் கோட்டை ஒரு போதும் நெருங்காதீர்கள். நீங்கள் தனியாக்கப்பட்டீர்களென்றால் எங்கேயோ ஒரு ஆபத்தில் மாட்டிக் கொள்ளப்போகிறீர்கள் என்று தான் அர்த்தம். எச்சரிக்கை! இதிலே வாலிபர், வயதானவர், திருமணமானவர், ஆகாதவர் என்றெல்லாம் கிடையாது. இது ஆபத்தான எல்லை!

---

## கவனம் ஆட்டுத்தோலைப் போர்த்த கள்ள உதவியாளர்கள்

அபிஷேகத்தையும் வல்லமையையும் ஏராளமாகப் பெற்றிருந்த சிம்சோனைப் பாருங்கள். பெண்களைப் பார்த்துவிட்டால் போதும் அவன் எல்லாவற்றையும் மறந்து அவள்


பின்னே போய்விடுவான். தனியாக சென்று வலையில் அகப்பட்டுக் கொள்ளாதீர். ஒருவேளை சூழ்நிலை அப்படி வருவதாக தெரிந்தால் நீங்களாகவே வேறு யாரையாவது வலிய துணையாக கூப்பிட்டுக் கொள்ளுங்கள். மற்றவர்கள் கவனிக்கும்படியாக பிரயாணம் செய்யுங்கள். ஒரு நாளும் மறைவான இடத்திற்கு சென்றுவிடாதீர்கள். எப்போதும் மூன்றாவது ஒரு நபர் இருப்பாரேயானால் உங்களுக்கு கொஞ்சம் பாதுகாப்பு இருக்கும்.

---

*இதிலேயும் ஒரு சிக்கல் உண்டு. **வாலிபர்களே பாவத்திற்கு துணை செய்கிற யாரையும் துணைக்கு வைத்துக் கொள்ளாதீர்கள்.** அப்படித் தவறான காரியத்திற்கு உதவி செய்கிற ஆட்டுத் தோலைப் போர்த்த கள்ள உதவியாளர்கள் இந்த உலகத்திலே இருக்கத்தான் செய்கிறார்கள். அந்தவிதமான கள்ள உதவியாளர்களை நம்பாதிருங்கள்.*

---

பாலியல் விஷயத்தில் வேதம் அறிவுறுத்தும் ஒரே ஒரு எச்சரிக்கையான **விலகியோடு! விலகியோடு!** அந்த இடத்தை விட்டுக்கடந்து போய்விடு என்பதை ஒரு போதும் மறக்க வேண்டாம்.



ஜெபிக்கலாமா;

அன்பின் ஆண்டவரே, என் ஜீவிய காலம்
முழுவதும் ஆபத்தான எல்லையை உமது
வசனத்தின்படி தாண்டவும், என்னைக்
காத்துக் கொள்ளவும் உம் ஆவியினால்
என்னை நிரப்பி அநேகருக்கு பயனுள்ள
பிள்ளையாய் என்னை மாற்றுவீராக.

ஆமென்.

---

## சரியான விடை எழுதியவர்களில்
## பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

### வினாவிடை - 82

நா.நந்தினி
பொன்னகர்

### குறுக்கெழுத்துப் போட்டி - 80

கோ.உதயராஜா
அனலைதீவு

ரேமா




# ஜீவ அப்பம் நானே!

இயேசு தன்னை அடையாளம் காட்டிக் கொடுக்கிறார்; **"தான் யார் என்பதையும், தன் மீது நீங்கள் என்ன செய்ய வேண்டும்"** என்பதையும் தெளிவாய் விளக்கும்படியாகவே **"ஜீவஅப்பம் நானே"** என முழங்கினார்.

ஏறக்குறைய புருஷர்கள் மாத்திரம் ஐயாயிரம் பேராயிருந்தார்கள். ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் கொண்டு போஷித்தவர் மீதமும் பன்னிரண்டு கூடை நிறைய எடுக்க வைத்தார். புசித்து திருப்தியானவர்கள் இயேசு அக்கரைக்குப் போனபின்பும் கூட அவரைத் தேடிச் சென்றனர்.

ஆண்டவர் இயேசு அவர்களை நோக்கி நீங்கள் அற்புதங்களை கண்டதினால் அல்ல அப்பம் புசித்து திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்றார். **தன்னைத் தேடுகிற வர்களின் மனநிலையையே ஆண்டவர் அறிந்திருக்கிறார். உண்மையாய் தேடுகிறவர்கள் அவர் மீது மெய்யான விசுவாசத்தை சாற்றி அவரைப் பணிந்து கொள்ள வேண்டும்.**

**இயேசு சொன்னார்: அவர் அனுப்பினவரை (தன்னை) விசுவாசிப்பதே தேவனுக்கு ஏற்ற கிரியையாயிருக்கிறது.**

அழிந்து போகிற போஜனத்துக்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள். என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.



**உண்மையாய் தம்மைத் தேடுகிற ஒருவரையும் ஆண்டவர் ஒரு போதும் கைவிடவே மாட்டார். அவரே மெய்யான ஜீவஅப்பம். அவர் மீது நாம் விசுவாசம் கொள்வோமாக.**

# நீ கர்த்தருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமா?



திருமதி. J.பிலிப்




டெய்சி தன்னுடைய பெற்றோருக்கு ஒரே பெண் பிள்ளையாக இருந்தாள். சிறு வயதில் இருந்தே அலங்காரமான பொருட்களைப் பார்த்து ரசிப்பது அவளது வழமையான பொழுது போக்கு. அவளுடைய பாடசாலை நாட்கள் முடிந்த பிற்பாடு அழகியற்கலை வகுப்புக்களுக்கு செல்ல விரும்பியதால் அவளுடைய பெற்றோர்கள் அவளை ஒரு அழகியற் பாடசாலைக்கு சென்று அவள் விரும்புகிற அலங்காரங்களை கற்றுக்கொள்ள அனுமதித்தார்கள். டெய்சியும் அங்கு சென்று திருமண கேக் அலங்காரம், திருமண பெண்களை அலங்கரித்தல், உணவு வகைகளை தயாரித்து மேசையில் அலங்கரித்தல், பூக்களினால் அலங்காரம் செய்தல், ஆடைகளில் பூ வேலை செய்து அலங்கரித்தல் பேன்ற காரியங்களை மிகவும் ஆர்வத்துடன் கற்றுக்கொண்டு வந்தாள். பயிற்சி வகுப்புக்கள் முடிந்த பின் பரீட்சை நடாத்தப்பட்டது. பல பெண்கள் பரீட்சையில் கலந்து கொண்டு தாம் கற்றுக்கொண்ட காரியங்கள் எல்லாவற்றையும் கொண்டு ஆக்கங்களை செய்து பார்வைக்கு வைத்திருந்தார்கள். அவற்றில் டெய்சியின் கரங்களினால் தயாரிக்கப்பட்ட அலங்காரமான பொருட்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. பலருடைய பாராட்டுக்கள் அவளுக்குக் கிடைக்கப்பெற்றன.

நானும் ஒரு அழகியற் கலை வகுப்புக்களை நடாத்தி பல பெண்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று தனக்குள் ஒரு தீர்மானத்தை எடுத்தாள். டெய்சி ஒரு கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவள். மிகவும் சந்தோஷத்துடன் அடுத்து ஞாயிறு ஆராதனைக்கு சென்றிருந்தார்கள்.

அங்கே தேவ செய்தியின் நேரத்தில் போதகர்: **ஏசாயா 62:3 நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்.** என்ற தலைப்பில் தேவ செய்தியை ஆரம்பித்தார். **நீங்கள் இன்றைக்கு கர்த்தருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமாய் இருக்கிறீர்களா?** என்று சபையாரைப் பார்த்து கேட்டார். உடனடியாக அந்த நேரத்தில் டெய்சி தன்னைக் குறித்து சிந்திக்கத் தொடங்கினாள். இன்று நான் என்னுடைய கரங்களினால் பல அலங்காரமானவற்றை தயாரித்து எல்லாருடைய பாராட்டுக்களையும் பெற்று நான் அலங்கரித்தவைகளுக்கு முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டேன். ஆனால் நான் இன்று கர்த்தருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமா? என சிந்திக்கத்தொடங்கினாள்...

இதை வாசிக்கும் சகோதரியே! பொதுவாக அலங்காரம் என்றால் பெண்களுக்கு மிகவும் பிடித்தமானதொரு காரியம். இன்று நாம் எதைப் பார்த்தாலும் அலங்காரமாகத் தான் இருக்கிறது. அலங்கோலத்தையும், அலங்கரித்து அழகுபடுத்தக் கூடிய நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் நமது ஆண்டவர் நாம் ஒவ்வொருவரும் அவருடைய கரத்தில் அலங்காரமான கிரீடமாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.

அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்கிறாயா? நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். **ஒன்று கையின் கீழ் அடங்க வேண்டும். அடுத்து கைக்குள் அடங்கி இருக்க வேண்டும். சாராள் - ஆகாரை கடினமாய் நடத்தினபடியால் அவளைவிட்டு ஆகார் ஓடிப்போனாள் (ஆதியாகமம் 16:6).** ஆகார் நாச்சியாரின் கைக்குள் இருந்து தப்பி தனக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்ற எண்ணத்துடன் ஓடிப்போய்க் கொண்டிருக்கிறாள்.

ஆனால் நடந்தது என்ன? கர்த்தருடைய தூதனானவர் **"நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப் போய், அவள் கையின் கீழ் அடங்கியிரு என்றார் (ஆதியாகமம் 16:9).**

ஆகாரின் உள்ளம் எவ்வளவாய் பாடுபட்டிருக்கும். ஆபிரகாமினால் கைவிடப்பட்டு, நாச்சியாரினால் கடினமாய் நடத்தப்பட்டவளைப் பார்த்து, **திரும்பி போய் அடங்கி இரு** என்ற வார்த்தைகள் அவளுக்கு இன்னும் எவ்வளவு வேதனையை உண்டு பண்ணியிருக்கும். **அவளுடைய அங்கலாய்ப்பை தேவன் கண்டார். அவளும் தேவனைக் கண்டு, என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி தன்னோடே பேசின கர்த்தருக்கு; "நீர் என்னைக் காண்கிற தேவன்"** என்று பேரிட்டாள். தேவனைக் கண்டு கொண்டபடியினால் நாச்சியாரின் கையின் கீழ் அடங்கி இருக்க அவளுக்கு இலகுவாக இருந்திருக்கலாம். கடினமாய் நடத்தப்படுகிற போது என்னை தேவன் காண்கிறார் என்ற நம்பிக்கையுடன் திரும்பிப் போனாள் ஆகார். ஏற்ற நேரம் வந்தது, அப்போது ஆபிரகாம் ஆகாரையும் அவள் பிள்ளையையும் பிரித்து அனுப்பிவிட்டான். **கையின் கீழ் அடங்கி இருந்தவள் இப்போது ஓடிப்போகவில்லை. ஏற்ற காலத்தில் அவள் அனுப்பிவிடப்பட்டாள்.**

உன்னுடைய வாழ்க்கையிலும் கடினமான சூழ்நிலைகள் ஏற்படும் போது ஆகாரைப் போல இருக்கும் வீட்டைவிட்டு, வேலை ஸ்தலத்தைவிட்டு, ஏன் தேவாலயத்தைவிட்டு ஓடிப்போகலாம் என்று யோசிக்கிறாயா? ஆனால் உனக்கு ஒரு நல்ல செய்தி உண்டு. ஆபிரகாம் ஆகாரை சாராளின் கைக்குள் ஒப்புக்கொடுத்தான். அவள் ஆகாரை கடினமாய் நடத்தினாள். ஆனால் நம் தேவனோ இன்று உன்னை தனது பலத்த கைக்குள் அடக்கி வைக்க ஆயத்தமாய் இருக்கிறார். உன்னை அவருக்கு ஒப்புக்கொடுப்பாயா?

**1பேதுரு 5:6 ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.** வாழ்க்கையில் உயர்வு வேண்டுமா? **பிள்ளைகள் – பெற்றோருக்கு அடங்கி இருக்க வேண்டும். மனைவி – கணவனுக்கு அடங்கி இருக்க வேண்டும். விசுவாசிகள் – போதகருக்கு அடங்கி இருக்க வேண்டும்.** நீ இருக்கும் இடத்தில் அடங்கி நடக்கும் போது அதுவே உன் வாழ்வுக்கு அலங்காரமாய் இருக்கும். உன் வாழ்வு அலங்காரமாய் இருக்க வேண்டுமா **தேவனுடைய கரத்திற்குள் அடங்கி இரு.** அப்போது **நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும் உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாய் இருப்பாய்.** இரண்டு இடம் உண்டு; **ஒன்று தேவ கரம் அடுத்து பிசாசின் கரம்.** இன்று யாருடைய கரத்தில் நீ இருக்கிறாய்? நீ இருக்க வேண்டிய இடம் **தேவகரம்.** தேவனுடைய கரத்தில் தான் உனக்கு பாதுகாப்பு, உயர்வு உண்டு என்பதை மறந்து போகாதே. தேவனுடைய கரத்திற்குள் அடங்கியிரு அப்போது தேவனுடைய கரத்தில் ஒரு கிரீடமாய் இருப்பாய்.

**வெளிப்படுத்தல் 3:11 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு.**



## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!



*“நாங்கள் பெயர்போன நான்கு பாவிகள், ஒருவன் புறப்பட்டுப் போய் நான்று கொண்டு செத்தான், மற்றவன் நியாயத்தீர்ப்பில் அற்புதமாய் தப்பினான், இன்னொருவனை கண்களைக் குருடாக்கி இரட்சித்தார். நான் அவரை நோக்கிப் பார்த்து மனங்கசந்தழுதவன், அவர் திரும்பி பார்க்க மன்னிப்பு பெற்று உழைத்தவன்” நாங்கள் யார்? யார்?*

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

அனல் 2017 ஆடி - ஆவணி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**நாவு**







**நா**ம் அறியாதவற்றை எல்லாம் தேவன் அறிவார். நாம் நமது அறிவுகளின் இயலாமையை உணரும் போது தேவன் அனைத்தையும் அறிந்திருக்கிறார். நம்முடைய வாழ்வினை சஞ்சலமும், நெருக்கமும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நான் நல்லது என்று காணும் வழிகளில் எல்லாம் மறைவான கண்ணிகள் வைக்கப்பட்டு அகப்பட்டுக் கொள்கிறேன்.

உதவிக்காக வலது புறம் திரும்புகின்றேன் என்னைப் புரிந்து கொள்ள யாருமில்லை. இடது புறம் திரும்புகின்றேன் யாவும் வெறுமையும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகின்றது. என் பாரங்களை தாங்குவதற்கு, என்னை விசாரிப்பதற்கு, என்னைப் புரிந்து கொள்வதற்கு எவரும் இல்லையென நாம் கலங்கிக் கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் இருந்து தான் தாவீது இச் சங்கீதத்தைப் பாடுகின்றார்.


**சங்கீதம் 142:3a என் ஆவி என்னில் தியங்கும்போது, நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்;** தாவீது சவுலிற்கு மறைந்து அதுல்லாம் என்னும் கெபியில் இருக்கும் போது பாடிய சங்கீதம் தான் இது.

எம்மைப் போலவே பலவித பாடுகளின் ஊடே கடந்து சென்ற தாவீதின் விசுவாசமும், நம்பிக்கையும் இன்று எம்முடையதாக மாறட்டும். நாம் பிரச்சினைகளை காணும் போது மட்டும் தான் அறிகிறோம் "நான் இந்த பிரச்சினைகளுக்குள் கடந்து செல்கிறேன்" என்று. ஆனால் தேவனோ "அந்த பிரச்சினை உருவாவதற்கு முன் எப்போதோ அறிந்து இருக்கிறார்".

என் ஆவி எனக்குள் தியங்கும் போது நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர். நம்முடைய வழிகளில் சிக்கல்கள் ஏற்பட்டு நாம் போகும் பாதை சரியா? என்ற கேள்வி எம்முடைய வாழ்வை பெரிதும் உலுப்பிவிடுகின்றது. ஏனெனில் நாம் பிரச்சினைகளிற்கு உள்ளே அகப் படத்தான் முடியும். ஆனால் அதில் இருந்து விடுவிக்க தேவன் தான் வரவேண்டும். ஏனெனில் எம்முடைய இக்கட்டான வேளைகளிலும் கூட அவர் நமக்கு அருகில் இருந்து நம்மை முற்றிலும் அறிந்தவராய், நம்மை நடத்துகின்றார்.

அருமையான தேவபிள்ளையே உன் ஒடுங்கின ஆவிக்கு பதிலாக துதியின் ஆடையை உனக்கு அருள தேவன் வல்லவராக இருக்கிறார். **ஏசாயா 61:3 சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப் படுவார்கள்.** நீ போகும் பாதையை அவர் அறிவார். ஆகையால் நீ உன்னை வேதனைப்படுத்தாதே. சஞ்சலமும், நெருக்கங்களும் சூழ்ந்து கொள்ளும் வேளைகளில் கர்த்தரை உன் அருகில் நீ கண்டு கொள்ள வேண்டும்.

நீ போகும் பாதை தெரியாமல் திகைக்கும் போதெல்லாம் உன் தேவனை உன் விசுவாசக் கண்களினால் சரிவர கண்டுகொள். எனவே எமது பாதங்களிற்கு பாதைகளை ஆயத்தப்படுத்த வல்ல தேவனை நோக்கிப் பார்ப்போம். சோர்வுகளையும், தயக்கங்களையும் தூக்கி வீசுவோம். ஜெயம் எப்போதும் எம்முடையதே.



---

*நீ விழுந்த தவறில் இருந்து எழுந்து*
*கற்றுக் கொள்வது சிறந்தது!*
*நீ விழுந்த காரியத்தை நீ விழாதது போல*
*கற்பிப்பது மிகப்பெரிய ஏமாற்று!*




# நமது சொந்த திட்டங்களுக்கு தேவனுடைய வேலை என்கிற முலாம் பூசுதல் ஆபத்தானது

தேவனுடைய பரிசுத்தமான ஊழியத்தில் இன்று பெருகிவரும் பெறுமதியற்ற தன்மைக்கும் மக்கள் கர்த்தருடைய ஊழியத்தையும், பலவேளைகளில் ஊழியர்களையும் அற்பமாய் எண்ணுவதற்கான காரணங்களில் முக்கியமான ஒன்று: தம் சொந்த வேலைத்திட்டத்தை தேவனுடைய செயல்களுடன் இணைத்துவிடுவதே. **யாத்திராகமம் 20:7 உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல்விடார்.** ஆண்டவர் மோசேக்கு கொடுத்த பத்துக்கட்டளைகளுக்குள் ஒன்று இது. *தேவனுடைய நாமம் பெரும்பாலும் விளையாட்டுப் பொருளைப் போன்று ஆகிவிட்டது. எதற்கெடுத்தாலும் ஆண்டவருடைய நாமத்தை தேவையற்ற விதங்களில் பயன்படுத்து வதை, தேவனுடைய நாமத்திற்குரிய கனம் மீறப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருக்க முடியும்.* பழைய வரலாறுகள் கூறுகிறது: வேத வார்த்தையை எழுதுகிற போது **"கர்த்தர்"** என்ற சொல்லை எழுதினால், எழுதினவுடனேயே அந்த எழுத்தாணியை உடைத்துவிடுவார்கள். ஏனென்றால் **"கர்த்தர்"** என்று எழுதப்பட்ட எழுத்தாணியை இன்னொரு வார்த்தை எழுதுவதற்கு பயன்படுத்தமாட்டார்கள்.

சிந்தித்துப்பாருங்கள்! வேதாகமத்தை எழுதி முடிப்பதற்குள்ளாய் எத்தனை எழுத்தாணிகள் (எழுது கோல்கள்) முறிக்கப்பட்டிருக்கும். தேவனுடைய நாமம் அவ்வளவு பரிசுத்தமானது, தூய்மையானது, மேன்மையானது, கனமானது. **நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த நாட்களில் கர்த்தருடைய நாமத்திற்குரிய கனத்தை நாம் செலுத்த வேண்டும்.** இரண்டு மனிதர்கள் தங்களுடைய மீறுதல்களுக்கு கர்த்தரையும் அவருடைய

காரியத்தையும் இணைக்கி றார்கள். அதன்பிற்பாடு பார்த்தால் அவர்களுடைய வாழ்வில் மிகப் பெரிதான இழப்பை சந்தித்தார்கள். அவர்களைக் குறித்து தொடர்ந்து ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. அப்சலோம் தன் துரோகத்தை மறைக்க கர்த்தரை ஆராதிப்பதாகக் கூறினான்

**11சாமுவேல் 15:7-8 (7.) நாற் பது வருஷம் சென்றபின்பு, அப்சலோம் ராஜாவை நோக்கி: நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும்படிக்கு நான் போக உத்தரவு கொடும். 8. கர்த்தர் என்னை எருசலேமுக்குத் திரும்பிவரப்பண்ணினால், கர்த்தருக்கு ஆராதனை செய்வேன் என்று உமது அடியானாகிய நான் சீரியாதேசத்தில் கேசூரிலே குடியிருக்கும் போது, பொருத்தனை பண்ணினேன் என்றான்.** அப்சலோம் தாவீது ராஜாவின் குமாரர்களில் ஒருவன். அவன் சிறந்த அழகுள்ளவன் என்று சொல்லப்படுகிறது. அப்சலோம் ஒரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய சகோதர முறையான அம்னோனை கொலை செய்துவிட்டான். அது தகப்பனாகிய தாவீது ராஜாவுக்கு தெரிய வருகிறது. எனவே தகப்பன் தன்னைத் தண்டிப்பார் என்று பயந்து அப்சலோம் வீட்டிலிருந்து ஓடிவிட்டான். அதன் பின் சில காலங் களிற்கு பிற்பாடு சிலர் தாவீது ராஜாவோடு பேசி அப்சலோமை திரும்பவும் அரன்மனைக்கு கொண்டு வந்தார்கள்.

அவ்வாறு அரன்மனைக்கு வந்த பிற்பாடு அவன் தன் தகப்பனுடைய ராச்சியபாரத்தை தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அப்சலோமுக்கு ஏற்படுகிறது. எனவே அதற்காக அவன் அரன்மனைக்கு வரும் மக்களோடு சமாதானமாய் பேசி, விசாரித்து, அவர்களுக்கு நன்மை செய்வது போன்று நடந்து, ஒரு ஜனக்கூட்டத்தை தனக்கு உருவாக்குகின்றான். அதன் பிற்பாடுதான் தகப்பனோடு இருக்கிற இடத்தைவிட்டு சென்று, அதாவது தகப்பனின் ஆட்சியைக் கலைத்து தான் அந்த ராச்சியத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதைத் தான் செய்யப்போகிறான். ஆனால் அதற்கு அவன் ஒரு சாட்டை கூறுகிறான். தன்னுடைய தகப்பனுக்கு விரோதமாக செயலாற்றப் போகிறான். அவன் செய்யப்போவது பாவம் ஆனால் அதை சமாளிப்பதற்கு அப்சலோம் தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தினான். மிக வேதனையான தண்டனைக்குரிய ஒன்றை அப்சலோம் செய்தான். தேவனுடைய நாமம் பரிசுத்தமானது, தேவனுடைய நாமம் உண்மையானது, தேவனுடைய நாமம் ஆராதனைக்குரியது, தேவனுடைய நாமம் விலையேறப் பெற்றது. ஆனால் இவன் ஒரு அசிங்கத்தை, தகப்பனுக்கு விரோதமாக செய்யும் துரோகத்தை மறைப்பதற்காக கூறிய வார்த்தை: நான் தேவனுக்கு பண்ணிய பொருத்தனையை நிறைவேற்ற வேண்டும், நான் அவரை ஆராதிக்க வேண்டும் எனக்கு அனுமதி தாருங்கள்.

ஆராதனை என்றால் என்ன? எங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பது தான் ஆராதனை. ஆவி. ஆத்துமா. சரீரம்

தூய்மையாக இருப்பது தான் ஆராதனை. தேவன் வெறுக்கிறவை களை நாம் வெறுத்து அவருடைய வார்த்தையின்படி வாழ்ந்து காண்பிப்பது தான் ஆராதனை. பரிசுத்தமுள்ள தேவனுக்கு அருகில் செல்வது தான் ஆராதனை. ஆராதனைக்கு இன் னொரு அர்த்தம்: தேவனை முத்தம் செய்வது. எனவே ஆராதனை வாழ்க்கை முறை என்பது அது மாய்மாலத்திற்குள் சேர்ந்த வாழ்க்கை முறையாகாது. ஆராதனை வாழ்க்கை முறை அது நீதியானது. தேவன் தன்னுடைய இரத் தத்தினால் கழுவிய பரிசுத்த தன்மையில் எம்மைக் காத்துக் கொண்டிருப்பது தான் நாம் அவரை ஆராதிக்கிற ஆராதனை முறை. ஆராதனை முறை எம்முடைய வார்த்தையிலும், செய்கையிலும் உண்மையாக இருப்பது. அப்சலோம் கூறிய வார்த்தை தேவனை மிக வேதனைப்படுத்திய வார்த்தை. தாவீது எப்படிப்பட்டவர் என்றால் எப்போதும் எல்லாவற்றிற்காகவும் ஆண்டவரைத் துதித்துக் கொண்டிருப்பார். இன்பத்திலும் துன்பத்திலும் அவர் எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்வார். ஒரு கட்டத்திலே ஒரு பெரிய பாவத்தை செய்துவிட்டார். அதற்கென்று பாவமன்னிப்புக்கென்றே அதிகாரத்தையும் (சங்கீதம் 51) எழுதி வைத்திருக்கிறார்.

அவருக்கும் தேவனுக்கும் இருக்கிற உறவின் உடைவை அவரால் தாங்கமுடியவில்லை. **சங்கீதம் 51:10 தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.** என்று கெஞ்சி அழுகிறார். தாவீதுக்குத் தெரியும் தேவனுக்கும் தனக்கும் இடையில் இருக்கிற அந்த உறவு எப்போதும் இருக்கிற தொடர்பு. அது தான் எப்போதும் தேவனை ஆராதிக்கிற ஆராதனை வாழ்வு என்று. **உங்களுடைய வாழ்வில் துன்பங்கள், இன்பங்கள், நன்மைகள், தீமைகள் போன்வற்றுக்கு முகம் கொடுப்பீர்கள். ஆனால் அவை எல்லாவற்றின் மத்தியிலும் எம்முடைய ஆராதனை முறை அது நேர்மையானதாக உண்மையானதாக இருக்க வேண்டும்.** தேவனை ஆராதிக்க வேண்டும் என்றால் தாவீது கண்டிப்பாக அனுப்புவார் என்பதை அப்சலோம் அறிந்திருக்க வேண்டும்.

தன்னுடைய மீறுதலுக்கான காரியத்தை மறைப்பதற்கு பரிசுத்தமுள்ள தேவனை ஆராதிப்பது என்னும் மூடலை அணிவித்தான் அப்சலோம். ஊழியர்கள் தங்களின் திட்டங்கள், யோசனைகள், சுயவிருப்பங்கள் நிறைவேறும் வரைக்கும் அல்லது நிறைவேற்றிய பின்பும் கூட அது தேவன் சார்ந்த விடயம் என வாதாட முடியும். அதற்கு தேவன் சார்ந்த செயல் என காண்பிக்கவும் முடியும். அல்லது தேவனுக்கு விரோதமான செயலை தேவனுடைய என்பது போல இணைத்துக் காட்டவும் முடியும். எமது சொந்த வாழ்வில் உண்மையற்றவர்களாய் இருக்கும் வரையும் இது தொடரவாய்ப்புண்டு. தமது சொந்த மனச்சாட்சிக்கு துரோகம் செய்யும் ஒருவரால் இன்னொருவருக்குத் துரோகம் செய்வது இலகு. மறைவான வாழ்வில் உண்மைத்தன்மை கெட்டுப் போயிருந்தால், எமது கிரியை கெட்டதாயிருக்கும். அதை வெளியே காட்ட நாம் இடம் கொடுக்காமல் இருப்பதற்காக தேவன் சம்பந்தப்பட்டதை மூடலாகப் பயன்படுத்துகிறோம்.

தொடரும்...




# சிவப்பு ரோஜா

ஜசிந்தா அக்கா




அழகான ஒரு பூந்தோட்டம். எங்கு திரும்பி பார்த்தாலும் வண்ண வண்ண மலர்கள் நறுமணம் வீசிக் கொண்டிருந்தன. பச்சை நிற இலைகளோடு மரங்களாய், செடி களாய், கொடிகளாய் படரும் வகை களாய் தோட்டத்தைக் குளிர்ச்சியாக் கிக் கொண்டிருந்தன. எங்கெங்கோ இருந்து வந்த பறவை இனங்கள் மரங்களில் இங்கும் அங்குமாக பறந்து திரிந்தன. சின்னச் சிட்டுக்கள் பூ மரங்களில் கீச்... கீச்.. என்று சத்தமிட்டுப் பறந்து பூக்களில் இருக்கும் தேனைக் குடித்தன. வண்டு இனங்களும் தேனைக் குடிப்பதற்காக பூக்களை நாடி வந்து கொண்டு இருந்தன. சூரியனும் மெல்ல மெல்ல ஒளி வீச ஆரம்பித்தான்.

அழகான அந்தக் காலை நேரத்தில் ஜோண் தனது பூந்தோட் டத்தைப் பார்க்கச் சென்றான். சுற்றும் முற்றும் நன்றாகக் கவனித் தான். இந்தக் காலை நேரம் மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினால் நன்றாக இருக்கும் என்று எண்ணி தண்ணீர் பாய்ச்ச ஆரம்பித்தான். மரங்களின் பாத்திகளில் தண்ணீர் நிரப்பும் போது பறவைகள் வந்து செட்டையடித்து மகிழ்ச்சியோடு குளிக்க ஆரம்பித்தன. இதைக் கண்ட ஜோண் சந்தோஷப்பட்டான். தான் பறவைகளுக்கு உதவி செய்ததை நினைத்து மகிழ்ந்தான். தனது பூந்தோட்டத்தில் இருந்த மரங்கள், பூக்கள், பறவைகள் எல்லாவற்றையும்


பார்த்து தேவனை துதிக்க ஆரம்பித்தான். நாங்கள் மகிழ்ந்திருக்க இவைகளைத் தந்தீரே என்று முழு இருதயத்தோடு இயேசப்பாவிற்கு நன்றி சொன்னான். பூக்களைப் பற்றிப் பாடினான், பறவைகளைப் பற்றிப் பாடினான். இயேசுவிற்கே மகிமையை செலுத்திக் கொண்டிருந்தான்.

அவ் வேளையில் "ஜோண் நான் இயேசு வந்திருக்கிறேன்" என்று ஒரு சத்தம் கேட்டது. உடனே ஜோனின் உள்ளம் ஆச்சரியத்தினாலும் மகிழ்ச்சியினாலும் நிறைந்து "இயேசுவே" என்று சொன்ன பொழுது இயேசுவின் கரங்களைக் கண்டான். இயேசு இரண்டு கரங்களாலும் ஒரு அழகான சிவப்பு நிற ரோஜா மலரை ஜோனுக்கு கொடுத்தார். அப்பொழுது ஜோன் இயேசப்பா எனக்கு வேண்டாம் என்றான். அதற்கு இயேசு ஏன் உனக்கு வேண்டாம். அதற்கு ஜோன் இந்த ரோஜா மலரில் முட்கள் இருக்கின்றன, அவைகள் எனது கரங்களில் குத்திவிடும். ஆகவே எனக்கு வேண்டாம் என்றான். அதற்கு இயேசு சுவாமி இந்த ரோஜா மலரில் இருந்த முட்களையெல்லாம் நான் எடுத்துக்கொண்டேன். நீ பயமில்லாமல் எடுத்துக் கொள் என்றார்.

பிள்ளைகளே, முள்ளுக் குத்தினால் வலிக்கும் அதே போல உங்களிலிருக்கும் கெட்ட குணங்களும் முள்ளுகளைப் போல் உங்களைக் குத்தி உங்களுக்கு வேதனையைத் தரும். உங்களால் சந்தோஷமாய் இருக்க முடியாது. நீங்கள் சந்தோஷமாய் இருக்கும்படியாய் அந்த முட்கள் எல்லாம் இயேசுவின் தலையில் முடியானது. இதனால் உங்கள் எல்லா கெட்ட குணங்களையும் இயேசுவிடத்தில் சொல்லி மன்னிப்பை பெற்றுக் கொள்ளக்கூடியதாயிருக்கிறது.

இயேசப்பாவின் செல்லப் பிள்ளைகளே, ஜோனைப் போல் இயற்கை அழகைப் பார்த்து மகிழலாம், தேவனுக்கு நன்றி செலுத்தலாம். தேவனிடத்தில் ஜெபிக்கலாம். ஆனால் இயேசு சுவாமி எதை உங்களுக்குத் தர விரும்புகிறாரோ அதையே ஏற்றுக் கொள்ளுங்கள். அது உங்களுக்கு நல்லது. அப்பொழுது உங்கள் வாழ்க்கை முட்கள் எடுக்கப்பட்ட ரோஜா மலரைப் போல அழகானதாயும், வாசனை வீசுகிறதாயும் இருக்கும். இயேசு என்னும் வாசனை வீச இயேசுவையே உள்ளத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

**நான் சாரோனின் ரோஜா – உன்னதப்பாட்டு 2:1**



# அருட்பணியாளர் சரிதை



## ஜான் வெஸ்லி
## 1703 - 1791

### இன்றே இரட்சண்ய நாள்

தந்தையைப் பின்பற்றி போதகரானார் ஜான் வெஸ்லி. "ஆவிக் குரிய மனந்திரும்புதலே சரியான கிறிஸ்தவ வாழ்க்கை" என்று போதிக்கத் தொடங்கினார்.

ஆனால் அவர் பணியாற்றிய திருச்சபை, வெஸ்லியை வேதப்புரட்டராகக் கண்டிக்கவே இங்கிலாந்து திருச்சபையை விட்டு வெளியேறினார். திறந்தவெளி பிரசங்கியானார்.

தெருத்தெருவாக இவர் செய்த பிரசங்கத்தால் திரளான மக்கள் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் அனுதினமும் வந்தனர். இப்புதிய விசுவாசிகளை பராமரித்து வளர்க்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததால் "மெதடிஸ்ட்" என்ற புதிய திருச்சபையை ஸ்தாபித்தார்.

நற்செய்தியை அறிவிப்பது இவருக்குத் தேன் சுவை போல் காணப்பட்டது. இங்கிலாந்து தேசம் முழுவதும் 2 இலட்சத்து 50 ஆயிரம் மைல்கள் குதிரையில் சவாரி செய்து, 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரசங்கங்கள் செய்துள்ளார். 200க்கும் மேற்பட்ட ஆவிக்குரிய புத்தகங்களை எழுதியுள்ளார்.

சமயப்பணிக்கும், சமுதாயப்பணிக்கும் சம்பந்தமில்லை என்று கருதப்பட்ட காலத்தில் சமுதாயப்புரட்சி செய்ததால் "சமுதாயச் சிற்பி" என்று அழைக்கப்பட்டார்.

இங்கிலாந்தின் முதலாவது இலவச மருந்தகம், இலவச பள்ளிக்கூடம் இலவச ஆதரவற்றோர் இல்லங்கள் என ஏராளமான நன்மைகளைச் செய்துள்ளார்.

அடிமை முறைகளை அகற்றவும் அரும்பாடுபட்ட ஜான் வெஸ்லி தமது 88ஆவது வயதில் இவ்வுலகை விட்டு விடை பெற்றார்.

**அன்பரே! ஜான் வெஸ்லியைப் போன்று சுவிசேஷத்தை சுறுசுறுப்புடன் அறிவிக்க உங்களை அர்ப்பணிப்பீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உற்சாகத்துடன் எரிபந்தமாய் சென்றிடு, நீ எரிவதை கண்டிட மக்கள் பல மைல் தூரம் நடந்து வந்து கவனிப்பர். — ஜான் வெஸ்லி**

**நன்றி: “மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்” மார்ச் 02**

---



# ஜேம்ஸ் கால்வர்ட்

# 1813 - 1892

## தேவைகள் அதிகம்...

நாம் வாழும் உலகில் எண்ணற்ற மொழிகள் பேசும் மக்கள் உண்டு. ஆனால், எல்லா மொழிகளிலும் வேதாகமம் வெளியிடப்படவில்லை. ஏனென்றால், சில மொழிகள் கற்றுக் கொள்வதற்கும், பேசுவதற்கும் மிகக் கடினமாக காணப்படுகின்றன. அம்மக்களைத் தேடிச் சென்று அவர்களோடு தங்கி அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்டு, வேதாகமத்தை மொழி பெயர்ப்பது என்பது மிக மிக சிரமம் தான்.

ஆயினும், ,கிறிஸ்துவின் அன்பால் ஏவப்பட்டவர்கள், அம் மக்களைத் தேடிச் சென்று அவர்கள் தாய் மொழியிலேயே வேதாகமத்தை மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

பிஜி தீவு. மக்கள் காட்டுமிராண்டிகளாகவும், நரமாமிச பட்சினிகளாகவும் வாழ்ந்தவர்கள். இம் மக்களைத் தேடி தன் மனைவி மேரி ஃபௌலருடனும், தன் நண்பர் ஜான் ஹண்டுடனும், 1838ல் பிஜி தீவுக்குப் பயணமானார் ஜேம்ஸ் கால்வர்ட். கடினமான மொழியாயினும், மிகுந்த ஆவலோடு அம் மக்களுக்கு வேதாகமத்தைக் கொடுக்க வேண்டும் என்ற தணியாத வாஞ்சையினாலும், வேகமாக அம் மொழியைக் கற்றுக் கொண்டார்.

ஏற்கனவே, புத்தக அச்சுத் துறையில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் வேதாகமத்தை வெளிக்கொணருவதற்காக 1856இல் இங்கிலாந்தை நோக்கிப் பயணமானார். 1857ல் பிஜி மொழி வேதாகமத்துடன் பிஜி தீவுக்குத் திரும்பி வந்தார். அத் தீவில் வாழ்ந்த மக்களுக்கு எழுதவும், வாசிக்கவும் கற்றுக் கொடுத்த பின்பு வேதாகமத்தை அவர்கள் கையில் கொடுத்தார். 10 ஆண்டுகள் அங்கு பணி செய்த பின் 1866இல் இங்கிலாந்து திரும்பினார்.

தென்னாபிரிக்காவை நோக்கி தன்னுடைய மிஷனெரி பயணத்தை துவக்கினார். 1872ஆம் ஆண்டு முதல் 1880ஆம் ஆண்டு வரை மாபெரும் ஆன்மீக புரட்சியை அங்கு ஏற்படுத்தினார். பல்வேறு இடங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து கிறிஸ்துவின் அன்பை தன்னால் இயன்ற மட்டும் சுறுசுறுப்புடனும், உற்சாகத்துடனும் பறைசாற்றினார். பிஜி தீவு மக்களையே தன் சிந்தனையில் கொண்டிருந்த இவர், மீண்டுமாக பிஜி வேதாகமத்தை இருமுறை திருத்தம் செய்து வெளியிட்டார். பிஜி மக்களுக்காகவே வாழ்ந்த இவ் இறைத் தொண்டர் நம்மையும் இப் பணி செய்ய அறைகூவல் தருகிறார்.

**அன்பரே! வேதாகமத்தை பிற இன மக்களுக்கு கொடுப்பதில் உங்களின் பங்கு என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உன் செல்வத்தை பதுக்கி வைத்தல் அழிவே. அதை இழத்தல் வாழ்வே. ஆதலால் கொடு. — பேசன்ஸ் ஸ்ட்டிறாங்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 8**

---

# வினாவிடை — 82



01. சங்கீதம் 104:18
02. யோபு - யோபு 14:16
03. இஸ்ரவேல் - ஏசாயா 19:24
04. எரேமியா 31:23
05. நீதிமொழிகள் 14:26
06. தாவீது - சங்கீதம் 71:7
07. சாமுவேல் - 1சாமு 9:13
08. ஏசாயா 27:9
09. ஏசாயா 28:17
10. தாவீது - சங்கீதம் 14:6

**சரியான பதில்கள்**

# குறுக்கெழுத்துப் போட்டி - 81

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ✋ | | | | | | | 02 |
| | | | 03 | | | | | ✋ |
| | | | ✋ | 04 | | | | |
| | | | ✋ | | | | 05 | |
| | | 06 | ✋ | 07 | | | | |
| | | ✋ | 09 | ✋ | | | 08 | |
| | | 10 | | 11 | | | ✋ | |
| ✋ | 14 | | | ✋ | | | 13 | 12 |
| 15 | | | | | | | | ✋ |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- நன்றி -

## இடமிருந்து வலமாக

03. "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே" எனக் கூப்பிட்டவன்
04. இதன் கொடுமுடியில் ஏறும்படி கர்த்தர் மோசேயிடம் கூறினார்
07. இவன் தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான்
11. "உத்தம வேதபாரகன்" என அர்தசஷ்டாவினால் கூறப்பட்டவன்
15. சவுல், தாவீதைப் பின் தொடருகிறதை விட்டுத்திரும்பிப் போன இடத்துக்கு இவ்வாறு பெயரிடப்பட்டது

## வலமிருந்து இடமாக

02. தன் ஆலோசனை நிறைவேறாததால் நான்று கொண்டு செத்தவன்
05. இஸ்ரவேலரைச் சபிக்க கூலி பொருத்தப்பட்டவன்
08. யூதருக்கு விரோதமான கட்டளையால் கலங்கிய நகரம்
13. ஏசா இவ்வாறும் அழைக்கப்பட்டான்

## மேலிருந்து கீழாக

01. யோயாக்கீனின் சிங்காசனத்தை ராஜாக்களின் சிங்காசனத்திற்கு உயரமாக வைத்தவன்
09. பார்வோனுக்காகக் கட்டப்பட்ட பண்டசாலைப் பட்டணங்களில் ஒன்று
10. ஆரோனின் குமாரர்களில் ஒருவர் (குழம்பியுள்ளது)

## கீழிருந்து மேலாக

06. செமாயாவின் அப்பா
12. இவனின் தாயின் பெயர் செரூகாள்
14. யூதா தேசத்திலுள்ள மக்னிதான் என்பதன் இன்னொரு பெயர்

# வினா விடை - 83

*01.* தனக்கு ஒரு ஜெயஸ்தம்பம் செய்து நாட்டின ராஜா யார்?

*02.* விதவையின் ஆசீர்வாதம் பெற்றது யார்?

*03.* பாகாலுடைய மேடுகளில் ஏறிய ராஜா யார்? தீர்க்கதரிசி யார்?

*04.* "இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது" என்று சஞ்சலப்பட்ட புருஷன் யார்?

*05.* விதவையை கெம்பீரிக்கப்பண்ணியது யார்?

*06.* தேவனோடு போராடி மேற்கொண்டவன் யார்?

*07.* தன் சேனைக்கு கல்லெறிகிற கவண்களை ஆயத்தப்படுத்திக் கொடுத்த ராஜா யார்?

*08.* விதவை அரசனுக்கு புத்தி சொன்னது எங்கே?

*09.* "நடக்கிற மனுஷரை மரங்களைப் போல கண்டவன்" யார்?

*10.* மலையின் உச்சியில் ஏறி நின்று, உரத்த சத்தமிட்டுக் கூப்பிட்டவன் யார்?

---

## சரியான விடை எழுதியவர்கள்

## குறுக்கெழுத்துப் போட்டி – 80, வினா விடை – 82

**காரைநகர்**
01. அ.தெபோரா
02. அ.கிருசாந்தன்
03. அ.துர்க்கா
04. அ.எஸ்தர்
05. நா.கிறிஸ்தீனா
06. நா.கிறிஸ்ரீன்
07. நா.அன்னாள்
08. மா.சுதர்சினி
09. பா.அனுகரன்
10. பா.அனுசியா
11. பா.அனுராதா

**அனலைதீவு**
12. கோ.உதயராஜா
13. சி.ரகுகரன்
14. க.நிரோஜினி
15. ச.டிலக்ஷனா

**குலமன்கால்**
16. த.மெலக்ஷிகன் *
17. த.மெருஜா *

**மீசாலை**
18. ச.கெற்ஷியா

**நாவற்குழி**
19. சூ.ஜான்சி *

**பாண்டவெட்டை**
20. வ.தயாழினி
21. வ.யோகணன்
22. வ.குவாழினி
23. வ.ஜெயாழினி

**கனடா**
24. குகன் குடும்பம்

**வேரவில்**
25. அ.அபிசாயினி ♦

**யாழ்ப்பாணம்**
26. பெ.ஜெசிதரன் ♦

**அளவெட்டி**
27. கு.குயின்சி
28. எஸ்.கிறிஸ்ரீனா
29. ச.துவாரகா - கிறிஸ்ரீபா

**பள்ளிக்குடா**
30. அ.கலிஸ்ரா
31. அ.கார்த்திகா

**பொன்னகர்**
32. நா.நந்தினி

♦ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்




போதகர் யோ.நிசாந்
ஜீவபாதை மிஷனெரி சபை,
யாழ்ப்பாணம்.

# திருச்சபையின் முக்கியத்துவமும் தேவன் எமக்கு கொடுத்த திருச்சபை தலைவர்களின் முக்கியத்துவமும்

**சங்கீதம் 133:1-3 (1.) இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? 2. அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், 3. எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.** இந்த அதிகாரத்தை நாம் மனப்பாடம் செய்திருப்போம். ஆனாலும் ஆண்டவர் இவ் வார்த்தைகளுக்கு ஊடாக சில சத்தியங்களை நம்மோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றார். **கர்த்தர் எங்களை தெரிந்தெடுத்து வைத்திருக்கிற திருச்சபையின் முக்கியத்துவத்தையும், இந்த திருச்சபையிலே கர்த்தர் எங்களுக்கு கொடுத்திருக்கும் தலைவர்களின் முக்கியத்துவத்தைக் குறித்தும்** கர்த்தர் கொடுத்த வார்த்தைகளுக்கு ஊடாக ஆராய்ந்து பார்க்கலாம்.

**சங்கீதம் 133:1 இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?** இவ் வார்த்தை திருச்சபையைக் குறிக்கிறது. புறம்பே பாவ இருளில்

இருந்து தேவனால் விடுதலையாக்கப் பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படி அழைக்கப்பட்ட தேவஜனங் களைக் குறிக்கிறது. *திருச்சபை என்று சொல்கிற போது அது வெறும் கட் டடத்தை குறிப்பது அல்ல. மாறாக அது தேவனுடைய ஜனங்களைக் குறிக்கிறது.* தேவன் தன்னுடைய ஜனங்களை அழைத்தது, அவர்கள் ஐக்கியமாக இருந்து ஒருவரை ஒருவர் நேசித்து, பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். **தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபை ஊடாகத் தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சித்தம் திட்டம் என்பவற்றை நிறைவேற்று கிறவராக இருக்கிறார். சபையை விட்டு வெளியே ஆண்டவர் தன்னு டைய திட்டத்தை நிறைவேற்றுவ தில்லை.** மாறாக திருச்சபை ஊடாகவே தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்று கிறவராக இருக்கிறார் என்பதை நாம் ஒரு போதும் மறந்து போகக்கூடாது.

ஆகையால் அவரால் அழைக் கப்பட்ட தேவ பிள்ளைகளாகிய நாங்கள் ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஐக்கி யமாகவும் ஒருவரை ஒருவர் மன்னித்து தேவன் விரும்புகிற ஆவிக்குரிய குணாதிசயங்களுடன் சபைக்குள் நாம் இருக்க வேண்டும் என்று விரும்புகின் றார். அப்படிப்பட்ட எண்ணத்தோடு, அனுபவத்தோடு, நற்பண்புகளோடு இருக்கிற வேளையிலேயே கர்த்தர் தன்னுடைய திட்டங்களையும் தீர்மானங் களையும் எங்களுக்கென்று நிர்ணயித்த தலைவர்களுக்கு ஊடாக நிறைவேற்று கிறார்.

**சங்கீதம் 133:2 அது ஆரோனு டைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு, அவனு டைய தாடி யிலே வடிகிறதும், அவனுடைய அங்கி களின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்**, இவ் வசனம் தலை மைத்து வத்தைக் குறிக்கிறது. ஆரோன் தேவனால் அழைக்கப்பட்ட முதன்மை யான ஆசாரியனாக இருக்கிறான். **ஆரோன் என்று சொல்கிற போது அது தலை மைத்துவத்தைக் குறிக்கிறது. தேவன் எங்களுக்கு கொடுத்த தலைமைத்து வமும் திருச்சபையும் விலையேறப்பெற்ற தாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்தின் படி தான் தேவன் இவைகளை எமக்கு கொடுத்தி ருக்கிறார்.** எங்கள் ஜெபங்களில் கர்த்தர் எங்களுக்கு கொடுத்திருக்கிற திருச்சபைக் காகவும் – தலைவர்களுக் காகவும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டியவர் களாய் இருக்கிறோம். **கர்த்தர் தன்னு டைய சித்தத்தையும் ஆசீர்வாதத்தை யும் திருச்சபையின் தலைவர்களுக்கு ஊடாகவே எங் களுக்கு தருகிறார் என்ற நல்ல தொரு படத்தை எங்கள் எண்ணத்திலே எப்போதும் வைத் திருக்க வேண்டும்.**

## 01. தேவன் எமக்கு கொடுத்த திருச்சபையின் முக்கியத்துவம்

*திருச்சபைக்குள் இருப்பது என்றால் அது ஞாயிறு ஆராதனை யோடு மட்டும் முடிவடைகிற அனு பவம் அல்ல. அல்லது கர்த்தருக்கு கொடுக்கிறதோடு முடிவடைகின்ற காரியமும் அல்ல.* கர்த்தர் எதற்காக நம்மை அழைத்தார் என்றால்; **எபேசியர் 1:4 தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள்**

**நம்மைத் தெரிந்துகொண்டபடியே.** எல்லா அனுபவத்தைப் பார்க்கிலும் அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகள் திருச்சபைக்குள் ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் உள்ளவர்களாக, அன்புள்ளவர்களாக, விட்டுக்கொடுக்கிறவர்களாக, ஒருவரை ஒருவர் கனப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும் என்பது மேலானது. இதற்காகவே என்னையும் உங்களையும் உலக தோற்றத்திற்கு முன்பு கிறிஸ்துவுக்குள்ளாய் தெரிந்தெடுத்திருக்கிறார். **இப்படிப்பட்ட மனப்பான்மையிலே இருக்கிற வேளையிலே கர்த்தர் தன்னுடைய ஆசீர்வாதத்தையும் திட்டத்தையும் தன்னுடைய திருச்சபைத் தலைவர்களூடாக பகிர்ந்து கொண்டு தன்னுடைய காரியங்களை நிறைவேற்றுகிறவராக இருக்கிறார்.**

**எபிரெயர் 10:25 சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.** சபை கூடிவருகிறது என்றால் ஞாயிற்றுக் கிழமை ஆராதனையோடு அதனை முடித்துக் கொள்கிறோம். **சபை கூடிவருதல் என்றால் அது ஐக்கியத்தை, அன்பை, ஒருமனப்பாட்டை, மன்னித்தலைக் குறிக்கிறது.** அந்த திருச்சபையிலே கர்த்தருடைய கனிகள் செயற்படுவதைக் குறிக்கிறது. தேவபிள்ளைகள் அன்புள்ளவர்களாக, ஒருவரை ஒருவர் மன்னிக்கிறவர்களாக, கடித்துப் பட்சிக்கிறவர்களாக அல்ல விட்டுக்கொடுக்கிறவர்களாக இருப்பதற்கே கர்த்தர் அழைத்திருக்கிறார். இப்படிப்பட்ட எண்ணங்கள் வாழ்க்கையிலே இருக்கிற வேளையில் மாத்திரம் தான் கர்த்தர் தன்னுடைய தீர்மானங்கள், ஆசீர்வாதங் களை தலைவர்களுக்கு ஊடாக எங்களுக் குத் தருகிறார். **அவர் தன்னுடைய திட்டத்தை தலைவர்கள் ஊடாகவே செயற்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கிறது.**

**திருச்சபைக்கு தலைவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.** *நாங்கள் பல்வேறுபட்ட மதப்பின்னணியில் இருந்து வந்திருக்கிறபடியால் தெய்வங்கள் ஆசீர்வதிக்கின்ற வேளைகளில் தெய்வம் இப்படியாகத் தான் ஆசீர்வதிக்கும் என்ற படம் எங்கள் நினைவுகளில் இருக்கிறது. சில படங்களைப் பார்த்தால் அலைகள் தங்களுடைய கரங்களை நீட்டும்போது தங்க காசு புறப்பட்டு வருவதாகவும், புதையல், பொக்கிஷங்கள் கொடுப்பதாகவும் இருக்கிறது.* ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்படிப்பட்டவர் அல்ல. **அவர் தன்னுடைய ஆசீர்வாதத்தை திருச்சபையிலே ஐக்கியமாக இருக்கிற ஜனங்களுக்கு தன்னுடைய தன்னுடைய தேவ பிள்ளைகளுக்கு ஊடாகவே தான் கொடுக்கிறவராக இருக்கிறார். கர்த்தர் தலைவர்களுக்கு ஊடாகத் தான் எங்களுக்கு வைத்திருக்கிற ஆசீர்வாதங்களைத் தருகிறார்.** நாங்கள் தனிப்பட்ட விதத்தில் ஆண்டவரிடம் ஜெபிப்பது உண்மை தான். பல விண்ணப்பங்களிற்காக ஆண்டவரிடம் காத்திருக்கிறோம், ஆண்டவரோடு போராடுகிறோம். பல பெரிய காரியங்களை ஆண்டவருக்காக சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கிறோம். ஆனால் ஒரு காரியத்தை நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள். **கர்த்தர் உங்களை அழைத்த திருச்சபைக்குள் நீங்கள் ஐக்கியமாக போதகருக்குள் அடங்கி**

யிருந்தால் தான் கர்த்தருடைய திட்டத்தை ஆசீர்வாதத்தை தன்னுடைய ஊழியக்காரர் மூலமாக உங்களுக்கு கொடுப்பார். உங்களுடைய ஜெபத்தைக் கேட்பார். உங்களுடைய விருப்பத்தின்படி உங்களை நடாத்துவார்.

**திருச்சபைக்கு கட்டுப்படாமல், வெளியே நின்று கொண்டு போதகருக்கு கீழ்ப்படியால் செயற்படுகிற போது கர்த்தர் உங்களை ஒரு போதும் பயன்படுத்த முடியாது.** எந்த ஊழியமாக இருந்தாலும் - செயற்பாடாக இருந்தாலும் அது கர்த்தருடையதாக இருக்க வேண்டும் என்றால் அது திருச்சபைக்குள்ளாகத் தான் இருக்க வேண்டும். திருச்சபை என்கிற அங்கத்திலே அது செயற்படுகிறதாக இருக்க வேண்டும். ஒரு போதகருக்கு கீழ் செயற்படுகிறதாக இருக்க வேண்டும். அது தான் கர்த்தருடைய திட்டமாக இருக்கிறது. அதைத் தான் சங்கீதம் 133 எடுத்துக் காண்பிக்கிறது.

தேவன் தன்னுடைய ஜனங்களுக்கு தான் நிர்ணயித்த தலைவர்களுக்கு ஊடாக திட்டங்களை பரிமாறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இப்பொழுது அவற்றில் சில காரியங்களை ஆராய்ந்து பார்க்கப் போகிறோம். எங்களுடைய உறவு தேவன் எங்களுக்கு கொடுத்த திருச்சபையோடு எப்படி இருக்கிறது? தேவன் எங்களுக்கு கொடுத்த தலைவர்களோடு எங்களுடைய உறவு எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது? தேவன் வைத்த இடத்தில் நாம் இருக்கிறோமா? அல்லது திருச்சபையைவிட்டு வெளியே நிற்கிறோமா? தேவன் எங்களுக்கு கொடுத்த தலைவர்களுக்கு கீழ்ப்படிந்து தேவன் கொடுக்கிற ஆசீர்வாதங்களை அவர்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்காக அடங்கி இருக்கிறோமா? அல்லது அவர்களை விட்டு தூர வெளியே நிற்கிறோமா? அப்படி வெளியே இருப்போமென்றால் நாம் கர்த்தரிடத்தில் இருந்து ஒன்றையும் எதிர்பார்க்க முடியாது. எந்த பெரிய நிறுவனங்களாக இருக்கலாம், தரிசனங்களாக இருக்க லாம். ஆனால் அவைகள் அனைத்தும் ஒரு திருச்சபைக்குட்பட்டதாகத் தான் இருக்க வேண்டும். இல்லையென்றால் அவைகளால் ஒரு போதும் தேவ திட்டத்தை, சித்தத்தை நிறைவேற்ற முடியாது. அவைகள் கர்த்தருடைய அங்கமாகிய திருச்சபையிலிருந்து புறப்படுகிறவைகளாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் மனமாற்றத்தையும், தேவனுடைய அழைப்பையும் காணக்கூடியதாக உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் தமஸ்குவில் இருக்கிற கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி, அடித்து, இழுத்து செல்வதற்கு எருசலேமில் இருக்கிற பிரதான ஆசாரியனிடத்தில் அனுமதியைப் பெற்று தமஸ்குவின் வழியில் சென்று கொண்டிருக்கிற வேளையில் நம்முடைய ஆண்டவர் பவுலை சந்தித்தது உண்மை தான். பவுலுக்கு தரிசனமாகி பேசியதும் உண்மை தான். தன்னுடைய ஊழியத்தின் திட்டத்தை பகிர்ந்து கொண்டதும் உண்மை தான். சில நாட்களுக்கு பிற்பாடு அனனியா என்கிற தீர்க்கதரிசியை அனுப்பி பவுலை சுகப்படுத்தியதும் உண்மை தான். ஆனால் நான் இங்கே எதைக் கூறவிரும்புகின்றேன் என்றால் தேவனுடைய சத்தத்தை கேட்ட பவுல், அந்த ஊழிய வாஞ்சையிலே, அந்த உற்சாகத்தோடு கூட தமஸ்குவிலே மூன்று வருடங்கள் இருந்துவிட்டார்.

அப்போஸ்தலர் 9:20 தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். கலாத்தியர் 1:14-18 (14.) என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன். 15. அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன், 16. தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணாமலும்; 17. எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்; அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன். 18. மூன்று வருஷம் சென்றபின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்துநாள் தங்கியிருந்தேன்.

பவுல் தமஸ்குவிலே இருந்துவிட்டார். ஆனால் அதற்கு முன்பாக இயேசு தான் அழைத்த அப்போஸ்தலர்களைக் கொண்டு எருசலேமிலே ஒரு அழகான திருச்சபையை நிறுவி இருந்தார். அந்த அழகான திருச்சபைக்கு பேதுருவை தலைமைப் பொறுப்பாக ஏற்படுத்தியிருந்தார். பவுலுக்குத் தெரியும் அங்கே திருச்சபை, தலைமைத்துவம் என்ற ஒன்று இருக்கிறது என்று. ஆனாலும் அவர் தமஸ்குவிலே மூன்று வருடங்கள் இருந்து தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றி விட்டார். அவ் மூன்று வருடங்களின் பிற்பாடும் தொடர்ந்து அவரால் தனித்து ஊழியம் செய்ய முடியவில்லை. உபத்திர வம், பிரச்சினை, அவரைக் கொலை செய்ய வகை தேடினார்கள். அந்த நேரத்தில் என்ன செய்வதென்று முடி வெடுக்காமல் உடனே ஆவியிலே ஒரு முடிவை எடுக்கிறார். ஆண்டவர் எனக்கு ஒரு திருச்சபையை, தலைமைத்து வத்தை எருச லேமிலே வைத்திருக்கிறார். நான் அந்த தலைமைத்துவத்திற்குள்ளாய் இருந்து, கர்த்தர் என்னை எதற்காக அழைத்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற ஆயத்தமாக இருக்கிறேன் என்று சொல்லி புறப்பட்டு எருசலேம் திருச்சபைக்கு வந்தார்.

ஒரு சாதாரண மீன்பிடித் தொழிலை செய்கிற பேதுருவின் தலைமைத்துவத்திற்கு கீழாக இருந்து, அக் காலத்தில் சிறந்த ஆசாரியனாக – வேதபாரகனாக இருந்த கமாலியேலின் பாதத்திலிருந்து வேதப்பிரமாணங்களை கற்றுத்தேறிய பவுல் ஊழியம் செய்வது என்பது மிகப்பெரியதொரு சவால். ஆனால் தேவ ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்கள், தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைமைத்துவங்களுக்கு எந்த ஒரு சாட்டுப்போக்கும் இல்லாமல் கீழ்ப்படிகிறவர்களாகவே இருப்பார்கள். அப்போஸ்தலர் 9:26-28 (26.) சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். 27. அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்டவிதத்தையும், அவர் அவனுடனே

**பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். 28. அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து;**

பவுலுக்கு சில எண்ணங்கள் எழுந்தது. **நான் எவ்வளவு படித்திருந்தாலும், எவ்வளவு மேன்மையுள்ளவனாக இருந்தாலும் தேவன் எனக்கென்று ஏற்படுத்திய திருச்சபைக்குள்ளாக இருந்து தான் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும்** என்கிற எண்ணம் உடையவராக இருந்தார். இது சவாலானது! வேத ஆய்வாளர்கள் இப்படியாக சொல்கிறார்கள்: பவுல் இயேசுவை அறிந்து விசுவாசிப்பதற்கு முன்பதாக அவர் மிகுந்த செல்வந்தராக இருந்தார். அவருக்கு சொந்தமாக இரண்டு வர்த்தக கப்பல்கள் இருந்தது. அவ்வளவு செல்வந்தனாக இருந்தார். பரிசேயன், தேவனுடைய காரியத்தில் வைராக்கியமாக வளர்க்கப்பட்டவர் சாதாரண மீன்பிடி செய்கிற பேதுருவின் கீழாக இருந்து ஊழியம் செய்வது என்பது மிகப்பெரிய சவால். நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், எப்படிப்பட்ட நிலைமையிலிருந்து வந்தாலும் தேவன் எங்களுக்கென்று வைத்த திருச்சபையில் இருந்து, தேவன் எங்களுக்கென்று நியமித்த போதகருக்கு கீழாக அடங்கி இருக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது.

பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுகிறவர்கள் கர்த்தர் ஏற்படுத்துகிறதான தலைமைத்துவத்திற்கு அடங்கி இருப்பார்கள். "போக்கும் வரத்துமாயிருந்தான்" என்றால் பிற்பாடு அவன் ஊழியங்களை செய்தாலும் அவனுடைய ஊழியங்கள் அனைத்தும் பேதுரு — சபை என்கிற தலைமைத்துவத்திற்கு கீழாக இருந்தது. பவுல் தலைமைத்துவத்திற்கு கீழாக அடங்கியிருந்த வேளையில், அந்தி யோகியாவில் ஜெபிக்கும் போது பரிசுத்த அவியானவரே தான் அழைத்த ஊழியத்திற்காக பவுலையும் - பர்னபாவையும் பிரித்து அனுப்பிவிடுங்கள் என்றார். பவுலை அழைத்த தேவன் அந்த அழைப்பை உறுதிப்படுத்தினார். அவர்கள் மறுபடியும் ஜெபித்து, பவுலை ஆசீர்வதித்து அனுப்புகிறார்கள். அவன் எங்கிருந்தாலும் தன்னுடைய தலைமைத்துவத்தில் உள்ள பேதுருவுக்கு உண்மையுள்ளவனாக இருந்தான். தலைமை திருச்சபைக்கு கணக்கு ஒப்புவிக்கிறவனாக இருந்தான். **அதற்கு பிற்பாடு பவுல் தமஸ்குவிலே நிறைவேற்றிய ஊழியத்தைவிட தலைமை திருச்சபைக்கும் - தலைமைத்துவத்திற்கும் அடங்கியிருந்த போது அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஊழியத்தில் பெரிய ஆசீர்வாதத்தையும் விரிவையும் தேவன் கொடுத்தார்.**

பவுல் பலதரப்பட்ட நிருபங்களை எழுதுகிறார். திருச்சபைகளை ஸ்தாபிக்கிறார். தேவன் பவுலின் கைகளால் தன்னுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவதற்காக அற்புத அடையாளங்களை நிறைவேற்றியதை காணக்கூடியதாக இருக்கிறது. **தேவன் ஏற்படுத்தின தலைமைத்துவத்திற்குள்ளாக வருவதற்கு முன்பாக அவருடைய ஊழியத்தைப் பார்ப்போமாக இருந்தால் பெரிதாக பேசிக்கொள்ளத் தக்கதாக ஒன்றுமில்லை. தேவன் தனது திட்டத்தை திருச்சபையில் தலைமைத்துவத்தில் உள்ள தமது தலைவர்களுக்கு ஊடாகவே கொடுக்**

கிறார். வெளியே இருந்து உள்ளே வந்த பவுலை இப்பொழுது தன்னுடைய அழைப்பை உறுதிப்படுத்தி மீண்டும் வெளியே அனுப்புகிறார். இப்பொழுது உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். இப்போதும் வெளியே நிற்கிற அனுபவத்தை உடையவர்களாய் இருப்பீர் களாயிருந்தால், திருச்சபையிலே இருக் கிற ஊழியர்களோடு — விசுவாசிகளோடு மனமுடைந்தவர்களாய், ஐக்கியத்தில் பிளவுபட்டவர்களாய், ஏதோ ஒரு காரியத் திற்காக திருச்சபை விளிம்பிலே நின்று கொண்டிருக்கிற சகோதரனே, சகோ தரியே நீ திருச்சபையைவிட்டு வெளியே நின்றால் ஒரு போதும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. தேவனுடைய சித்தத்தை செய்ய முடியாது. ஆகவே கவனமாக இருப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்தவர் எமக்கும் சந்தர்ப்பத்தை கொடுக்க ஆயத்தம் உள்ளவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டு ஒருவரை ஒருவர் மன்னித்து, கசப்பு, கோபங்களை விட்டுவிட்டு, எங்களுடைய நீதி நியாயங்களைபார்க்கிலும் கர்த்தரு டைய வார்த்தை விலையேறப்பெற்றதாக இருக்கிறது. அவருடைய அன்பு பெரிய தாயிருக்கிறது. என்ன நீதி நியாயங்கள் எங்களுக்குள் இருந்தாலும் அவைகளை விட்டுவிட்டு கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம். அப்பொழுது தான் கர்த்தருக்காய் பிரகா சிக்க முடியும். கர்த்தருடைய சித்தத்தை கடைசி நாட்களில் செயற்படுத்த முடியும், பரலோகராச்சியம் செல்ல முடியும். கர்த்தர் உங்களை அழைத்த திருச்சபையிலே இறுதிவரைக்கும் நிலைத்திருந்தால் தான் பரலோகம் செல்ல முடியும். இல்லை யென்றால் எந்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது. திருச் சபைக்கு வெளியே ஆண்டவர் எந்த ஆசீர்வாதத்தையும் வைக்கவில்லை. ஆசீர்வாதத்தை தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்களுக்கு ஊடாகவே தேவன் தேவ ஜனங் களுக்கு கொடுக்கிறார் என்கிறதான எண்ணம் எப்போதும் எங்களுடைய எண்ணங்களில் இருக்க வேண்டும்.

**எபேசியர் 1:19-23 (19.) தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர் களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மை யான மகத்துவம் இன்னதென்றும், நீங் கள் அறியும் படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகி றேன். 20. எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த் தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திர மல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, 21. அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத் தில் உட்காரும்படி செய்து,**

**சங்கீதம் 133:2 அது ஆரோனு டைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்,** தலைமைத்துவத் தின் ஊடாகத் தான் கர்த்தர் தன்னுடைய ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறார் என்பதை சரியாக புரிந்து கொள்ளும் வரைக்கும் பிரச்சினையாகத் தான் இருக்கும். அதனை அறிந்து கொண்ட பிற்பாடும் தலைமைத்துவத்திற்குள் தொடர்ந்து அடங்கி இருப்பது என்பதும்

கஷ்டம் தான். ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் நாம் அடங்கி இருப்பதற்கு உதவி செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார். மறுபடியும் சபைக்குள் வந்து, ஐக்கியத்திலே தரித்து, அன்பிலே தரித்து, ஒருவரை ஒருவர் மன்னித்து, ஏற்றுக் கொண்டு தேவனுடைய ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கின்ற வேளையில் கர்த்தர் நம்மை வைத்த இடத்திலே வைத்து ஆசீர்வதித்து உயர்த்த வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அவர் ஒருவரையும் தள்ளிவிடுகிற தேவன் அல்ல. *நம்மில் நாம் பாவம் இல்லையென்று சொல்வோமென்றால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம்.* நான் ஒரு பாவி, குற்றவாளி என்று நம்மை கர்த்தரிடத்தில் அர்ப்பணித்து ஒப்புக்கொடுப்போமென்றால் எல்லா அந்தகார கிரியைகளையும் எங்களுக்கு மன்னித்து எங்களை ஏற்றுக் கொள்ள ஆண்டவர் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார்: **என்னிடத்தில் வருகிறவனை நான் ஒரு போதும் புறம்பே தள்ளமாட்டேன்** என்று. ஆண்டவர் திருச்சபையைக் கொடுத்திருக்கிறார். இது தான் உங்கள் திருச்சபை இல்லையென்றால் ஆண்டவர் உங்களை வேறு இடங்களில் வைத்திருக்க முடியும். **அப்போஸ்தலர் 17:26 மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்;** முன் தீர்மானிக்கப்பட்ட காலங்கள் என்றால்; *இந்த பூமி உருவாகுவதற்கு முன்பே நாங்கள் எந்த நாட்டில், எந்த மாவட்டத்தில், எந்த கிராமத்தில், எந்த வீட்டில் வசிக்க வேண்டும், யாருக்கு பிள்ளைகளாக பிறக்க வேண்டும், எந்த சபையிலே, எந்த தலைமைத்துவத்திற்கு கீழ் இருக்க வேண்டும் என்று அவர் முன் குறித்திருக்கிறார்.* **திருச்சபையை விட்டு வெளியே நிற்கிறவர்கள் அவருடைய தீர்மானத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள்.** தேவன் தந்த தலைவர்களை விட்டு வெளியே நிற்கிறவர்கள் தேவ திட்டத்தை அவமதிக்கிறார்கள். அவருடைய திட்டம் – தீர்மானம் என்பவற்றுக்கு எந்த விதத்தில் நாம் எதிர்ப்பு தெரிவிக்க கூடாது. யாராக இருந்தாலும் எங்களை நாங்களே ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

பூமி உருவாக்கப்பட்ட பின்பு, ஆதாம் பாவம் செய்து ஒளித்துக் கொண்ட போது, ஆண்டவர்; **"ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?"** என்று அன்போடு கூப்பிடுகிறார். ஆனால் அங்கே தேவன் வைத்த இடத்தில் ஆதாம் இருக்கவில்லை. இந்தக் கணப்பொழுதும் ஆண்டவர் தான் வைத்த இடத்திலே காணாத உங்களைப் பார்த்து; **மகனே! மகளே! நீ எங்கே இருக்கிறாய்?** என்று அன்போடு கேட்கிறார். ஆண்டவர் அன்புள்ளவராய், கரிசனையுள்ளவராய் இருக்கிறார். அவருடைய சத்தத்தைக் கேட்டு, உங்களுக்கு இருக்கிற கோப தாபங்களையும், கசப்புக்களையும், பிரிவினை உண்டாக்குகிற எல்லாவிதமான மார்க்க பேதங்களையும் விட்டு விட்டு, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவர் எம்மை வைததிருக்கிற இடத்திற்கு மறுபடியும் வரவேண்டும். தலைவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்பொழுது கர்த்தர் பெரிய காரியங்களை செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

## 02. தேவன் எமக்கு கொடுத்த திருச்சபைத் தலைவர்களின் முக்கியத்துவம்

**11நாளாகமம் 13:1-2 (1.) ராஜாவாகிய யெரொபெயாமின் பதினெட்டாம் வருஷத்தில் அபியா யூதாவின்மேல் ராஜாவாகி, 2. மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; கிபியா ஊரானாகிய ஊரியேலின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மிகாயாள்; அபியாவுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்தது.** இது ஒரு சரித்திரப் பின்னணி கொண்ட சம்பவம். *சாலொமோனின் கீழ்ப்படியாமை நிமித்தம் சமஸ்த இஸ்ரவேலாக இருந்த 12 கோத்திரங்களும் சாலொமோனின் மகனான ரெகொபெயாம் காலத்தில் இரண்டாக பிரிந்தது. 10 கோத்திரங்கள் சாலொமோனின் ஊழியக்காரனாகிய யெரொபெயாமிற்கும் மிகுதி 2 கோத்திரங்கள் சாலொமோனின் மகனாகிய ரெகொபெயாமுக்கும் கொடுத்தார். ரெகொபெயாமும் யெரொபெயாமும் உயிரோடு இருக்கிற நாட்களில் எல்லாம் அவர்களுக்கு யுத்தம் நடந்தது.*

**11நாளாகமம் 12:15 ரெகொபெயாமின் ஆதியோடந்தமான நடபடிகள் செமாயாவின் புஸ்தகத்திலும், ஞானதிருஷ்டிக்காரனாகிய இத்தோவின் வம்ச அட்டவணையிலும் அல்லவோ எழுதியிருக்கிறது; ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் சகல நாளும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.** ரெகொபெயாம் மரித்த பின்பு அவனுடைய மகனாகிய அபியா அவனுடைய ஸ்தானத்தில் ரஜாவகிறான்

**11நாளாகமம் 13:3 அபியா தெரிந்துகொள்ளப்பட்ட நாலுலட்சம்பேராகிய பராக்கிரம சேவகரின் இராணுவத்தாரை யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணினான்; யெரொபெயாம் தெரிந்து கொள்ளப்பட்ட எட்டுலட்சம்பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்தினான்.** எதிரியின் பக்கத்திலே 8இலட்சம் பலத்த பராக்கிரமசாலிகள். ஆனால் தாவீதின் பேரனான அபியாவின் பக்கம் வெறும் 4 இலட்சம் பேர் இருக்கிறார்கள். யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள். அப்பொழுது அபியா அவர்களைப் பார்த்து எச்சரிப்பின் செய்தியைக் கூறுகின்றான்.

தேவன் அபிஷேகம் பண்ணினவர்களுக்கு விரோதமாக யுத்தத்திற்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் யுத்தத்திலே வெற்றி பெறமாட்டீர்கள். ஏனென்றால் கர்த்தர் எங்களோடு கூட இருக்கிறார் என்று அபியா சொல்வதற்கு காரணம் என்னவென்றால்; **தேவனுக்கு ஆசாரிய ஊழியம் செய்கிற ஊழியர்கள் ரெகொபெயாமுடன் இருந்தார்கள்.** ஆனால் யெரொபெயாம் கர்த்தர் தனக்கு கொடுத்த ஆசாரியர்களை தள்ளிவிட்டான். **11நாளாகமம் 11:14 லேவியர் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யாதபடிக்கு யெரொபெயாமும் அவன் குமாரரும் அவர்களைத் தள்ளிப்போட்டபடியினால், தங்கள் வெளிநிலங்களையும் தங்கள் காணியாட்சிகளையும் விட்டு, யூதாதேசத்துக்கும் எருசலேமுக்கும் வந்தார்கள்.** அவனும் அவன் குமாரரும் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தலைமைத்துவத்தை நிராகரித்துவிட்டார்கள். *அவர்கள் தங்களுக்குப் பிரியமானவர்கள், தங்களது எண்ணங்களுக்கு தலையாட்டுகிற தலைவர்கள், பூசாரிகளை தங்களுக்கு ஏற்படுத்திக்*

*கொண்டார்கள்*. யெரொபெயாமால் தள்ளப்பட்ட கர்த்தருடைய ஆசாரியர்கள் ரெகொபெயாமிடம் வந்தார்கள். அவன் அவர்களை அன்போடு ஏற்றுக்கொண் டான். ரெகொபெயாமுடன் ஆசாரியங்கள் இருந்து ஆசாரிய ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள். இது ரெகொபெயா மின் மகன் அபியாவுக்கு பெலனாக இருந்தது.

**11நாளாகமம் 13:9-12 (9.) நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த் தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு, தேசாதேசங்களின் ஜனங் களைப்போல உங்களுக்கு ஆசாரியர் களை உண்டுபண்ணவில்லையோ? இளங் காளையினாலும், ஏழு கடாக்களினாலும், தன்னைப் பிரதிஷ்டையாக்கும்படி வருகிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே. 10. எங்களுக்கோ கர்த்தரே தேவன்; நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை; கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், பணிவிடை செய்கிறவர்கள் லேவியருமாமே. 11. அவர்கள் தினந் தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின் மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக் கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந் தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார் கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டு விலகினீர்கள். 12. இதோ, தேவன் எங்கள் சேனாபதி யாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகை களைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ர வேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ் செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக் குச் சித்திக்காது என்றான்.**

**அபியா தன்னுடைய நான்கு இலட்சம் பராக்கிரமசாலிகளை நம்ப வில்லை. தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைவர்கள் தன்னோடு இருப்பது பெலன் என்பதைக் கண்டு கொண் டான்.** கவனித்துக் கொள்ளுங்கள்! பணபலம் படைத்தவர்களாக இருக்கலாம், கல்வி அறிவு உடையவர்களாக இருக்க லாம், எந்த பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய ஆற்றல் உடையவர்களாய் இருக்க லாம். நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தா லும் கர்த்தர் எங்களுக்காக நியமித்த தலைவர்கள் எங்களோடு இருக்க வேண்டும். அவர்களை எந்தக் காரணம் கொண்டும் தள்ளிவிடக்கூடாது. இன்றைக்கு ஜனங்கள் யெரொபெயாமைப் போல கர்த்தர் ஏற்படுத்தின தலைவர்களை தள்ளிவிட்டு தங்களுக்கு பிரியமான தலைவர்களை நாடி ஓடிக்கொண்டிருக்கி றார்கள். கவனம்! அவர்கள் முடிவு மரணத்தை நோக்கிய தாக இருக்கிறது. **கர்த்தர் ஏற்படுத்தின தலைமைத்து வம் யார் என்பதை தேவ உதவியோடு கண்டு கொள்ள வேண்டும்.**

ஆசாரியர்கள் ரெகொபெயா மிடம் வந்த போது அவன் அவர்களை ஏற்றுக்கொண்டான். ரெகொபெயாம் மரித்த பின்பு அவன் மகன் அபியா யுத்தத்திற்கு புறப்படுகிற வேளையில் அவன் தன்னுடைய படைகளைக் குறித்து கூறவில்லை. அவன் சொல்கிறான்: கர்த்தர் எங்கள் தளபதியாக பக்கத்தில் இருக்கிறார், எங்களுக்கு பூரிகைகளை முழக்குகிற ஆசாரியர்கள் எங்கள்

பக்கத்தில் இருக்கிறார்கள் என்று. **எண்ணாகமம் 10:8-9 (8.) ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்; உங்கள் தலைமுறை தோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது. 9. உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந் தொனியாய் முழக்கக்கடவீர்கள்; அப்பொ ழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூறப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள்.** தேவனால் நியமிக்கப்பட்ட தலைவர்களாகிய ஆசாரி யர்கள் தான் பூரிகைகளை முழங்க வேண்டும். **அவர்கள் பூரிகை வாசிக் கிற வேளையில் எங்களுக்கு ஜெயம் வரும்.** எல்லா சந்தர்ப்பங்களிலும் கர்த்தர் எங்களுக்கு கொடுத்த தலைவர்கள் எங்களுக்கு பக்கத்தில் இருக்க வேண்டும். அவர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் எங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமுள்ள வர்களாய் இருக்கிறார்கள்.

உங்களது தேவை, வெற்றி, மேன்மைகள் போன்றவற்றை தேவன் உங்களுக்காக தெரிந்தெடுத்த தலைவர் கள் ஊடாகவே தருகிறார். ஆகவே அபியா அந்த விடயத்தில் ஞானமுள்ள வனாய் இருந்தான். **11நாளாகமம் 13:11-12 11. அவர்கள் தினந்தோறும் கர்த் தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின்மேல் சமுகத்தப் பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்கு களைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதை யும் விசாரிக்கிறார்கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டு விலகினீர்கள். 12. இதோ, தேவன் எங்கள் சேனாபதி யாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகை களைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ர வேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்றான்.**

இப்படி யுத்தத்திற்கு அணிவகுத்து முகமுகமாய் பேசிக்கொண்டிருக்கிற போது யெரொபெயாம் தன் படைகளில் அவரைவாசி பேரை பிரித்து அவர்களை அபியாவுக்கு பின்பக்கமாக அணிவகுத்து விட்டான். எச்சரிப்பின் செய்தி கொடுத்துக் கொண்டு நிற்கிற வேளையில் யுத்தம் முன்பாகவும் பின்பாகவும் தொடங்கிவிட் டது. **11நாளாகமம் 13:14 யூதா ஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறதைக் கண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார் கள்.** கர்த்தர் கொடுத்த தலைவர்களை ஏற்றுக்கொண்டு கனப்படுத்திய அபியா யுத்தத்தில் வெற்றி பெற்றான்; கர்த்தர் ஜெயம் கொடுத்தார். கர்த்தர் ஏற்படுத்திய தலைமைத்துவத்தினை தள்ளிய யெரொ பெயாமும், அவன் மக்களும் தோல்வி கண்டனர், தாழ்த்தப்பட்டனர், பலவிதமான இழப்புக்களை சந்தித்தனர். யெரொபெயா மின் முடிவு கர்த்தர் அவனை அடித்ததி னால் அவன் செத்துப்போனான் என்று வேதம் சொல்கின்றது. காரணம்: தேவன் ஏற்படுத் திய தலைமைத்துவத்தினை அசட்டை பண்ணியதுமே. அபியாவோ தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். **11நாளாகமம் 13:15-22.**

**எங்கள் வெற்றிக்கு தேவன் கொடுத்த தலைவர்கள் எங்கள் பக்கத்தில் இருக்க வேண்டும். எங்கள் பாதுகாப்பிற்கு அவர்கள் உத்தரவாதிகளாக இருக்கிறார்கள்.** எந்த காரணத்திற்காகவும் எங்கள் நீதி நியாயம் வெளிப்படும்படியாக அவர்களை ஒரு போதும் தள்ளிவிடக்கூடாது. ஆண்டவரே இரங்கும், வெற்றி தாரும், என் வியாதியை நீக்கிப்போடும், உபத்திரவத்தில் நின்று இரட்சித்தருளும் என்று ஜெபிக்கிறீர்கள். ஆனால் உங்களுக்குள் ஒரு அறிவு இருக்க வேண்டும்: உங்களுக்கு தேவையான எல்லாவற்றையும் எப்போதும் உங்கள் தலைவர்களுக்கு ஊடாகவே தேவன் கொடுக்கிறார் என்று. தலைவர்களைவிட்டு, திருச்சபையைவிட்டு வெளியே போவோம் என்றால் நீங்கள் ஒன்றையும் கர்த்தரிடத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியவே முடியாது.

உங்களுக்காக பூரிகைகளை வாசிக்கிறவர்கள் உங்கள் பக்கத்தில் எப்போதும் இருக்க வேண்டும். எண்ணாகமம் 10ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். **வீட்டில் நன்மை நடந்தாலும் தீமை நடந்தாலும் அங்கே ஊழியர்களை கனப்படுத்தி அழைக்க வேண்டும்.** *அதிகமாக செலவழித்து மண்டபத்தில் திருமண விருந்து பசாரத்தை நடாத்துவோம், கொண்டாட்டங்களை நடாத்துவோம். ஆனால் அங்கே போதகருக்கு சொல்வோம்: போதகரே ஜெபத்தை சுருக்கி அடக்கிவிடுங்கள் என்று. ஒரு போதும் இவ்வாறு கூறவே கூடாது. நீங்கள் எவ்வளவு செலவழித்து கொண்டாட்டங்களை நிகழ்த்தினாலும் உங்கள் போதகர் வந்து உங்களுக்காக ஜெபித்தால் தான் ஆசீர்வாதம். அந்த ஆசீர்வாதத்தை தான் கர்த்தர் பார்க்கிறார்.* தேவன் உங்களுக்கு கொடுத்த சபைக்குள் இருங்கள்! தேவன் உங்களுக்கு கொடுத்த தலைவர்களுக்கு அடங்கியிருங்கள், கனம்பண்ணுங்கள். இதனால் தொடர்ந்து வரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் இதுவே சங்கீதம் 133. எனவே சபைக்குள், சபையின் தலைமைத்துவத்திற்குள் அடங்கி தொடர்ந்து நிலைத்திருங்கள்.

**“தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக”**



**சங்கீதம் 1:1-2 (1.) துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், 2. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)
## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை **(Sri Lanka)** | **220.00** |
| இந்தியா **(India)** | **390.00** |
| கனடா, அமெரிக்கா **(Canada & USA)** | **840.00** |
| சிங்கப்பூர், மலேசியா **(Singapore & Malaysia)** | **420.00** |
| மத்திய கிழக்கு நாடுகள் **(Middle East Countries)** | **510.00** |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா **(Germany, England, Italy & Australia)** | **720.00** |

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என் எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:........................................................................................

முகவரி:......................................................................................

...................................................................................................

...................................................................................................

ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக் கிழமைகளில் மாலை 5:00 மணிக்கு

# சீயோன் தேவாலயம்



வியாதிப்பட்டவர்கள்
தேவையுள்ளவர்கள்
பிசாசின் பிடியில் உள்ளவர்கள்



24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்

போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது.
இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

To: ..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

*Zion Church Office,*
*No. 347, Navalar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351